பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 24 புதன்கிழமை (09.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## மனைவி 4 மாத கர்ப்பிணி; கணவன் சடலமாக மீட்பு

### வவுனியா கூமாங்குளத்தில் சம்பவம்

(வவுனியா)
கூமாங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இரண்டாம் குறுக்குத்தெரு வீதியில் இளம் குடும்பஸ்தரின் சடலத்தினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.
நேற்று மாலை 5.00 மணியளவில் 23

## நாய்க்கடிக்கு இலக்கானவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

### தடுப்பூசி தவறுதலாகப் போடப்பட்டதாக உறவினர்கள் குற்றச்சாட்டு

(வவுனியா)
வவுனியாவில் நாய்க்கடிக்கு இலக்காகி வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் மரணமடைந்துள்ளார். 23

# மாடுகள் வெட்ட இலங்கையில் தடை

### மகிந்த முன்மொழிந்த திட்டம் பாராளுமன்றக் குழுவால் ஒப்புதல்



(கொழும்பு)
இலங்கையில் மாடுகளை வெட்ட தடை விதிக்கும் தீர்மானத்துக்கு பெரமுனவின் பாராளுமன்றக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட குறித்த திட்டத்துக்கு பெரமுனவினர் ஆதரவு வழங்கியுள்ளனர்.
(23ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தக்கூடாது

### மல்வத்துபீடத்தின் அனுநாயக்க தேரர்

(கொழும்பு)
ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தக் கூடாது. கட்டுப்படுத்துவதன் மூலம் ஏற்பட்ட பிரச்சினைகள் கடந்த கால நல்லாட்சியின்போது தெளிவாகத் தெரிந்தன.
முந்தைய அரசாங்கத்தின்போது நாட்டுக்கு ஏற்பட்ட பேரழிவை நாம் மீளவும் சந்திக்கக்கூடாது. பிரதமர் சொல்வதை ஜனாதிபதி செய்யாததாலும், ஜனாதிபதி சொல்வதை பிரதமர் செய்யாததாலும் இந்த பிரச்சினை ஏற்பட்டதாக மல்வத்து பீடத்தின் அனுநாயக்க தேரர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)



## வங்கி கடனுக்கான வட்டி 7 வீதத்தால் குறைக்கப்படும்

(கொழும்பு)
பொருளாதார வளர்ச்சி சீர் செய்யப்பட்டதன் பின்னர் வங்கி கடன் நூற்றுக்கு 7 சத வீதத்தால் குறைக்கப்படும். தேசிய உற்பத்திகளை வலுப்படுத்தி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் பிரதான இலக்காக காணப்படுகிறது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
கொழும்பு பிரதான நிலைய வியாபாரிகளுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது 23

## கோப்பாய் மத்தியில் 18 வயது இளைஞன் விபரீத முடிவு

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்த 18 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவத்தில் கோப்பாய் மத்தி 23

## 20ஆவது திருத்தத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)
அரசியலமைப்பின் 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராகவும் 19ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று 19 பிளஸ் என்ற செயற்றிட்டத்தை வலியுறுத்தும் வகையில் ஆர்ப்பாட்ட மொன்று நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.
எதிர்க்கட்சித் தலை 23

## வவுனியாவில் கைகலப்பு

### பெண் உட்பட ஐவர் வைத்தியசாலையில்

(வவுனியா)
வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சின்ன 23

## குளவி கொட்டியதில் 3 வயது சிறுமி பலி

### நொச்சிமோட்டையில் பரிதாபம்

(வவுனியா)
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமோட்டை பகுதியில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த நால்வர் குளவிக் கொட்டுக்கு இலக் 23

## ஹெரோயினுடன் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், சோனக தெருவில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மதுவரித் திணைக்களத்தினரால் 23

## யாழில் சுற்றிவளைப்பு 21 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரஷாத் பெர்னாண்டோ தலைமையில் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 21 பேர் கைது செய்யப்பட் 23

# மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பிரதான வீதி மானிப்பாய், பதிவு இலக்கமும் திகதியும் : J/1605 21.03.1972

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி :- எழுதுனர்.
குறியீட்டு இலக்கம் :- 302/14
சம்பள அளவுத்திட்டம் :- 15960 - 18760
(04/2018 இன்படி ) 135x10 - 145x10
வெற்றிட எண்ணிக்கை :- 02
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 15வது சம்பள அளவுத் திட்டத்தில் எழுதுனர் பதவியொன்றில் இரு (02) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 வது சம்பள அளவுத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) ல் கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. பதவி :- கிராமிய வங்கி முகாமையாளர்
குறியீட்டு இலக்கம் :- 205/12
சம்பள அளவுத்திட்டம் :- 16780 - 19930
(04/2018 இன்படி ) 150x10 - 165x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 13வது சம்பள அளவுத் திட்டம் கிராமிய வங்கிப் பகுதி பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம் ) சான்றிதழுடன் கிராமிய வங்கி பகுதி எழுது வினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

3. பதவி :- அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர்
குறியீட்டு இலக்கம் :- 201/13
சம்பள அளவுத்திட்டம் :- 16365 - 19265
(04/2018 இன்படி ) 140x10 - 150x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :- கூட்டுறவு பணியாளரின் 14 வது சம்பள அளவுத்திட்டத்தில் பதவி ஒன்றில் இரண்டு (02) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

4. பதவி :- களஞ்சிய முகாமையாளர்
குறியீட்டு இலக்கம் :- 208/14
சம்பள அளவுத்திட்டம் :- 15960 - 18760
(04/2018 இன்படி ) 135x10 - 145x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :-
(அ) கூட்டுறவு பணியாளரின் 15வது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு (02) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பள அளவுத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் நான்கு (04) வருடங்களுக்கு குயையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ்/ க.பொ.த. (சாதாரணதர)ல் கணிதம்/எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி

5. பதவி :- களஞ்சிய மேற்பார்வையாளர்
குறியீட்டு இலக்கம் :- 207/13
சம்பள அளவுத்திட்டம் :- 16365 - 19265
(04/2018 இன்படி ) 140x10 - 150x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14வது சம்பள அளவுத் திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ் / க.பொ.த. (சாதாரணதர)ல் கணிதம்/ எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப்பதவி யொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

6. பதவி :- களஞ்சிய பொறுப்பாளர்
குறியீட்டு இலக்கம் :- 202/13
சம்பள அளவுத்திட்டம் :- 16365 - 19265
(04/2018 இன்படி ) 140x10 - 150x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14வது சம்பள அளவுத் திட்ட பதவியொன்றில் இரண்டு ( 02 ) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளரின் 15வது சம்பள அளவுத்திட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடத்திற்கு குறையாத அனுபவம்
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) சான்றிதழ்/ க.பொ.த (சாதாரணதர)ல் கணிதம் / வர்த்தக எண் கணிதம் / எண்கணிதம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழி உள்ளடங்கலான 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

07 பதவி:- களஞ்சிய முகாமையாளர்
குறியீட்டு இலக்கம் :- 208/15
சம்பள அளவுத்திட்டம் :- 15545 - 18245
(04/2018 இன்படி ) 130x10 - 140x10
வெற்றிட எண்ணிக்கை :- 03
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பள அளவுத் திட்டத்தில் சம்மந்தப்பட்ட துறையலான பதவியல் இரு வருடத்திற்கு குறைாயத அனுபமவ் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17வது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் / க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் / எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய எண்கணிதம், சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும், தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

08. பதவி :- களஞ்சிய முகாமையாளர்
குறியீட்டு இலக்கம் :- 208/16
சம்பள அளவுத்திட்டம் :- 15135 - 17685
(04/2018 இன்படி ) 120x10 - 135x10
வெற்றிட எண்ணிக்கை :- 03
தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு (2) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் / க.பொ.த (சாதாரணதர)ல் கணிதம் / வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்கள அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

09 பதவி :- சாரதி
குறியீட்டு இலக்கம் :- 312/15
சம்பள அளவுத்திட்டம் :- 15545 - 18245
(04/2018 இன்படி ) 130x10 - 140x10
வெற்றிட எண்ணிக்கை :- 01
தகைமைகள் :-
அ. 5ம் தரக் கல்விச் சான்றிதழும் கார் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஒரு (1) வருடத்திற்கு குறையாத அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

### ஏனைய விபரங்கள்

01. விண்ணப்பங்கள் சங்க தலைமைக் காரியாலத்தில் பெற்று "தலைவர், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, மானிப் பாய்" முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

02. வயதெல்லை 18 - 45 வயதுவரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.)

03. விண்ணப்பப் படிவத்தினை சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்

04. தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப் பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல். விண்ணப் பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

05. நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும்போது சங்கத் தால் கோரப்படும் ரொக்கப் பிணையை செலுத்த வேண்டும்.

06. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 23.09.2020

(C-278)

செயலாளர்,
மானிப்பாய் பனை
தென்னை வள அபி.கூ.ச.

தொலைபேசி இல:-
021 225 5109,
077 843 5404


## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1008)

076 568 4346

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனை

யாழ். கரணவாய் மத்தி, கரவெட்டி குஞ்சர் கடைச் சந்திக்கு முன் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு பின் புறமாக 150m தொலைவில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணியும் அத்துடன் 4 காணித் துண்டுகளும் விற்பனைக்கு உண்டு. (3824)

தொடர்பு : 076 778 8845

## கண்ணீர் அஞ்சலி



தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பின் உறுப்பினர் வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள் அவர்களின் அன்புத் தந்தையார்

பிரம்மஸ்ரீ
ஞா. சபாரட்ண சர்மா

அவர்களின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-272)

தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு
Tamil People's Trust

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. (3792)

077 203 0309 / 077 818 5017

## விற்பனைக்கு

றெஜிபோம் ரீசைக்கிள் (மீள் சுழற்சி) இயந்திரம் ( FD - 10 ) விற்பனைக்கு உண்டு. மாநகர சபை, பிரதேச சபைகளுக்கு உகந்தது.

தொடர்பு : 075 039 4357

## கட்டடம் வாடகைக்கு விடுதல்

பிரதான வீதி, நெல்லியடியில் இதுவரை மக்கள் வங்கி நெல்லியடிக் கிளை இயங்கி வந்த, எமது சங்க கட்டடம் வாடகைக்கு விடப்பட உள்ளது. வாடகைக்கு பெற விரும்புவோர் 23.09.2020ஆம் திகதிக்கு முன் கூறு விலைகளை (செலுத்தக்கூடிய முற்பணம், மாதாந்த வாடகை என்பன குறிப்பிடப்பட வேண்டும்.) கீழ்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலதிக விபரங்களுக்கு காரியாலய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். (C-269)

பொது முகாமையாளர்,
கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
தொலைபேசி இலக்கம் : 021 226 3263

# பதவியேற்றார் பிரேமலால் ஜயசேகர



(கொழும்பு)

கொலை குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பாராளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர நேற்று பாராளுமன்றில் பதவிப் பிரமாணம் செய்தார்.

பாராளுமன்ற அமர்வுகளுக்கு பிரேமலால் ஜயசேகரவை கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் சிறைச்சாலை திணைக்களத்துக்கு உத்தரவிட்டதன்படி நேற்றுக் காலை ஆரம்பமான பாராளுமன்ற அமர்வில் பிரேமலால் ஜயசேகர கலந்து கொண்டு பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (ஜ-4)

# பிரேமலால் பாராளுமன்ற வருகைக்கு பலதரப்பினர் கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நேற்று கறுப்பு பட்டியுடன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தனர்.

இதன்போது பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் மேற்கொள்வதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இருப்பினும் நீதிமன்றத்தால் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதிக்கப்பட்டார் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சிகளின் ஆட்சேபனைகளை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நிராகரித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட மரண தண்டனை கைதியான பிரேமலால் ஜயசேகர நேற்று கூட்டத்தில் கலந்கொள்ள பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார். இதனை அடுத்து பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்த பின்னர் அவரை சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் பாராளுமன்றத்திற்கு அழைத்து வந்தனர். (2-7)

***************************

பிரேமலால் ஜயசேகரவின் பதவிப்பிரமாணத்தினையடுத்து சமகி ஜனபலவேகய 'கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது, சிறையில் அடைக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அங்கு ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து சமகி ஜனபலவேகய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். (ஜ-2)

# கால்நடை படுகொலைக்கு தடை


(கொழும்பு)

நாட்டில் கால்நடை படுகொலைக்கு தடை விதிக்கும் தீர்மானத்தை அரசாங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை நிறைவேற்றியுள்ளது.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்விலேயே, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்ட குறித்த திட்டம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி உள்ளூர் கால்நடைகளை அறுக்காமல், தேவைப்பட்டால் மாட்டிறைச்சியை இறக்குமதி செய்ய ஒரு திட்டத்தை கொண்டு வருவதற்குத் தயாராக உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி



(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் எதிரொலியால் வீழ்ச்சியடைந்த சுற்றுலாத் துறையை உயர்த்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 4.9 மில்லியன் யூரோ நிதியுதவியை வழங்க முடிவு செய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபிக்கும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், விரைவில் இந்த நிதியுதவி கிடைக்கும் என்று சைபி உறுதியளித்துள்ளார்.

பயண வழிகாட்டுதல்கள், உடற்பயிற்சி சுற்றுப்பயணங்கள், சுற்றுலாத் துறையில் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு உதவுதல், தொழிலில் ஈடுபடுவோரின் சுகாதாரம் மற்றும் பயிற்சி, சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலாத் துறையின் முன்னேற்றம் ஆகியவை இதில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் பெரும் சுற்றுச்சூழல் அழிவு

## ஹர்ஷன சாடல்



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்தில் பெரும் சுற்றுச்சூழல் அழிவு ஏற்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா சுட்டிக்காட்டினார்.


நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தன்னுடைய பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் ஆனைவிழுந்தான் சரணாலயத்திற்கு சென்றதாகவும் இதன்போது அரசியல் காரணமாக ராம்சார் ஈரவலய பகுதிக்கு ஏற்பட்ட அழிவு குறித்து நேரில் கண்டறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வனாந்தவில்லு மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள பல ஈரவலய பகுதிகளும் அண்மையில் அழிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் ஈரவலய பகுதிகளுக்குச் சொந்தமான பல ஏக்கர் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ஜ)

# தனித்துவத்திற்கு பொருத்தமான வகையில் அரசியலமைப்பு உருவாக்கம் இடம்பெற வேண்டும்



(கொழும்பு)

நாட்டின் தனித்துவம் மற்றும் வரலாற்று ரீதியான நிலைபேறான தன்மை ஆகியவற்றுக்குப் பொருத்தமான வகையிலே புதிய அரசியலமைப்பு உருவாக்கம் இடம்பெற வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் வைத்து நேற்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போதே பேராயர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பற்றி நடைபெற்றுவரும் விசாரணைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஜனாதிபதி மற்றும் உயரதிகாரிகளுக்கு கொலை அச்சுறுத்தல் சட்டமா அதிபர் திணைக்களம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கைதிகள் சிலரால் உயர் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு செயலாளரிற்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தனது அறிக்கைகளை நேற்றைய தினம் சமர்ப்பித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களான பொடி லெசி எனப்படும் ஜனித் மதுஷங்க சில்வா மற்றும் கொஸ் கொடதாரக எனப்படும் கீர்த்தி தாரக பெரேரா ஆகியோரினால் விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல் தொடர்பிலேயே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொடி லெசி மற்றும் கொஸ்கொடதாரக ஆகியோரை எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வாக்குமூலம் பதிவு செய்யுமாறு காலி பிரதான நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் பொலிஸ் திணைக்களத்திடமுள்ள ஆயுதங்களை விடவும் தம்மிடம் அதிக ஆயுத பலமும் ஆட்பலமும் இருப்பதாகவும் இரண்டு மணி நேரத்தினுள் நாட்டில் எந்தவொரு நபரையும் கொலை செய்வதற்கும் தங்களால் முடியுமென குறித்த நபர்கள் தம்மிடம் தெரிவித்ததாக பிரதி சட்டமா அதிபர் திலிப்ப பீரிஸ் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வாக்குமூலம் பதிவு செய்யுமாறு காலி பிரதான நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

# தனிப்பட்ட நலன் சார்ந்த 20 ஆவது திருத்தத்தை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

**இருபதாவது அரசியல் யாப்புத் திருத்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விரைவில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வரவுள்ள நிலையில், இது குறித்து நாட்டின் மீதும் பாராளுமன்ற ஜனநாயக விழுமியங்களின் மீதும் அக்கறை உள்ள அனைவரும் கட்சி, இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுதிரண்டு இதனை எதிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் நாடு படுபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுவிடும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் எச்சரித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில்,

இலங்கையில் ஏற்படவிருக்கின்ற எதேச்சதிகார ஆட்சியினுடைய முதற்படியாக அரசியல் சாசனத்துக்கான 20 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கொண்டுவரவிருக்கின்றது. ஏற்கனவே 20 ஆவது திருத்தமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 20 ஆவது திருத்தம் தொடர்பாக பல்வேறுபட்ட வாதப் பிரதிவாதங்களும் ஆரம்பமாகி இருக்கின்றன.

முன்னர் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டமானது ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ போன்றோரின் ஆசீர்வாதத்துடனேயே கொண்டுவரப்பட்டது. இதன் காரணமாக ஜனாதிபதிக்கு உரித்தான சில அதிகாரங்கள் பாராளுமன்றத்துக்கு மாற்றப்பட்டு அதனூடாக சுதந்திரமான ஆணைக் குழுக்களை நியமிக்கவும் ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும் தனிநபர் ஒருவரிடம் குவிந்திருந்த அதிகாரங்களை குறைத்து அதனை பாராளுமன்றத்துக்கு கையளித்து அதனூடாக ஒரு வெளிப்படையான நல்லாட்சி ஒன்றை உருவாக்குவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், அவ்வாறான திருத்தமானது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கும் சட்டவாக்க சபையின் தலைவரான பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகளை உருவாக்கியது. அந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சரியான வழிமுறைகளை ஆராய்வதை விடுத்து 19 ஆவது திருத்தத்தை இல்லாது செய்து மீண்டும் பழைய நிலைக்குப் போவதென்பது ஒரு சர்வாதிகார எதேச்சதிகார ஆட்சியொன்றை நிறுவுவதற்கே வழிவகுக்கும்.

கொண்டுவரப்படவுள்ள 20 ஆவது திருத்தம் என்பது ஜனாதிபதிக்கு மீண்டும் அதிகாரங்களை வழங்கி பிரதமருடைய ஒப்புதல் இல்லாமலேயே அமைச்சர்களை நியமிக்கவும், மாற்றவுமான அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன் முக்கியமான ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள் மற்றும் உயர் பதவிகள் போன்றவற்றுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்கக் கூடிய வகையில் இந்த 20 ஆவது திருத்தம் வழிவகுப்பதானது ஊழல், மோசடி மற்றும் சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதற்கே துணை நிற்கும்.

ஜனநாயகத்தில், வெளிப்படைத் தன்மையில், நல்லாட்சியில் அக்கறை கொண்ட சிங்கள மக்கள் விழித்தெழப் போகின்றார்களா? அல்லது ஓர் எதேச்சதிகார ஆட்சிக்கு வழிசமைக்கப் போகின்றார்களா? என்பதை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறுபட்ட தமிழர் பிரதிநிதிகளும் இந்த ஜனநாயக விரோத அரசியல் சாசன திருத்தத்திற்கு எதிராக குரல் கொடுப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வருவார்களா? அல்லது எதேச்சதிகாரத்துடன் இணைந்து பயணிப்பார்களா? என்பதை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

தாங்கள் புள்ளடியிட்டு தெரிவு செய்த தமது பிரதிநிதிகள் தமது நலன்சார்ந்து செயற்படப்போகிறார்களா? அல்லது அளித்த வாக்கின்மை மறைவதற்குள்ளாகவே தமது பிரதிநிதிகள் குறுகியகால அரசியல் சுயலாபத்திற்காக மக்களைக் காலம் முழுவதும் அடிமைகளாக வைத்திருப்பதற்கு ஆதரவளிக்கப் போகிறார்களா? என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

தற்பொழுது இந்த அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் எதிர்காலத்தில் தமது தவறுகளுக்காக வருந்த வேண்டிய நிலை ஏற்படும் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## தகவல் வழங்குவோருக்கு பணப்பரிசில்

(கொழும்பு)

சட்டவிரோத துப்பாக்கிகள், கைக்குண்டுகளை கைப்பற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தனிப்பட்ட தகவல் வழங்குவோர்களுக்காக பொலிஸ் வெகுமதி நிதியிலிருந்து பணப்பரிசில்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவினால் அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், கட்டளை அதிகாரிகள் / பணிப்பாளர்கள், பிரதேச அதிகாரிகள், மாவட்ட சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இதுகுறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் முதல்கட்டமாக அந்த பணப்பரிசில் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து இடம்பெறவுள்ளதுடன், அன்றைய தினம் அதன் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு அந்த காலத்தை மேலும் நீடிப்பது குறித்தும் பரிசீலிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலோசனைகளுக்கு அமைய தனிப்பட்ட விதத்தில் தகவல் வழங்கியவர்களுக்கு பணப் பரிசில் வழங்கும் போது ஏதாவதொரு அநீதி இழைக்கப்பட்டதாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கமைய பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## குணமடைந்தோர் 2935

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 9 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 935 ஆக அதிகரித்துள்ளது. இதேநேரம், நாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 123 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 2 ஆயிரத்து 935 பேர் வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 176 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் 12 பேர் இந்த வைரஸ் காரணமாக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். (ஜ-4)



## எனக்கு அதிகாரம் இருந்திருந்தால் ஆளும் கட்சியில் பலர் இருக்க மாட்டார்கள்

(கொழும்பு)

மோசடி செய்பவர்களையும் குற்றவாளிகளையும் தண்டிக்கும் அதிகாரம் தனக்கு இருந்தால், இன்று ஆளும் கட்சியில் பலர் இருக்க மாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மோசடி செய்பவர்கள் யாரும் பாராளுமன்றத்திற்கு வரமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இராசிபலன்

**09.09.2020**
**ஆவணி 24 , புதன்கிழமை**
**சப்தமி முன்னிரவு 10.59 மணிவரை**
**கார்த்திகை முற்பகல் 9.39 மணிவரை**
**சுபநேரம்-4.34-6.04 மணிவரை**
**இராகுகாலம் 12.04-1.34 மணிவரை**
**சந்தராஷ்டமம் விசாகம்**
**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி** **வளவன்**


மேஷம்

எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், சயன சுகக் குறைவான நாள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.


மிதுனம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


கடகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


சிம்மம்

சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர் கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


கன்னி

அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நண்பர்கள் மனங் கோணாது நடப்பது நல்லது, கௌரவக் குறைவான நாள்.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு. விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திரு மண முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கும்பம்

உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


மீனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம்,பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**நீ கோபப்பட்டால் உனக்குச் செலவு அதிகமாகும்**



**நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட வேட்பாளராக போட்டியிட்ட கொழும்பு தமிழ் ஊடகவியலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் இணைப்புச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.**

# 12 இலட்சம் பேர் கல்வியறிவற்றவர்கள்

(கொழும்பு)



**நாட்டில் 12 இலட்சம் பேர் கல்வியறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

தேசிய கல்வித் திட்டத்தின் ஊடாக பாடசாலை கல்விமட்டதில்முன்னெடுக்கப்பட்ட 100 வீதம் கல்வியறிவுமட்டத்தை அமையும் வரை தொடர்ந்து முன்னேற்றப்பட வேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-10)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்களின் அன்புத்தாயார்

**யோகமணி திருநாவுக்கரசு**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் உறவுகள் அனைவருக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக் குகின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-285)

**யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த வருடம் 21.09.2019 அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

**அமரர். சிதம்பரப்பிள்ளை திரவியம்**

(மின்சார பொறியிலாளர், தபாற்கந்தோர் ஊழியர்)

அன்னையின் மடியில் 28.10.1936
ஆண்டவன் அடியில் 21.09.2019

**அன்பான எம் குடும்பத்தின்**
**ஆணிவேராய் இருந்து**
**எம் அத்தனை பேருக்கும்**
**விருட்சம் தந்தீர்**
**இறுதிவரை உம் நினைவுகளுடன்**
**விழுதுகளாய் வாழ்வோம் அப்பா**

விநாயகர் வீதி,
கல்வியங்காடு.

(2027)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய திருவிழா திருப்பலி ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று செவ்வாய்க்கிழமை ஒப்புக் கொடுக்கப்பட்டது. (படங்கள்-குருநகர் செய்தியாளர்)

## தேர்த்திரு விழாவும் கிருஷ்ண ஜெயந்தியும்

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திரு விழாவின் தேர்த் திருவிழா கிருஷ்ண ஜெயந்தி நாளான இன்று புதன் கிழமை காலை 8 மணியளவில் இடம் பெறும்.

நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் திருவடி நிலை தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவமும் இரவு 7 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (5-4-18)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சிறுவர் விடுதி திறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில், விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடமாகாண சுகாதார சேவை பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய்-உரும்பிராய் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்ட விபத்தில் மூவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8)

## மறவன்புலோவில் இளைஞன் ஹெரோயினுடன் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மறவன்புலோ கிழக்கு பகுதியில் 3 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம்கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் விசாரணைகளை மேற் கொண்டு வருவதுடன் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றனர்.

மறவன்புலோ பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (5-4-30)

## கொரோனா கட்டுப்பாட்டில் எனிலும் சமூகத்தொற்று தொடர்பில் அவதானம் தேவை

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்று இலங்கையைப் பொறுத்தவரை தற்பொழுது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனினும், வடக்கு மக்கள் சமூகத் தொற்று தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் மற்றும் சமூக இடைவெளியினைப் பேணி சமூகத் தொற்று ஏற்படா வண்ணம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரேபிய நாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் வடக்கில் பல்வேறு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

சமூகத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் இனங் காணப்படாத போதிலும் மக்கள் சமூகத் தொற்று தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (5-8-4-33)

## "91 19" காணொளிப்பாடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தில் உருவாகிய "91 19" எனும் அழகிய காதல் காணொளிப்பாடல் நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை தென்னிந்திய நடிகர் விஜய் சேதுபதி தனது சமூக வலைத்தளம் ஊடாக வெளியிட்டு வைக்கவுள்ளார். மேலும் இப்பாடலின் Title Look மற்றும் First & Second Look Posters தென்னிந்திய பிரபல திரைப்பட இயக்குநர் மித்ரன் நடிகர்களான சாய்தீனா ரோபோ சங்கர் ஆகியோரும் வெளியிட்டு



வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (4-5)

## வேலணை சாட்டிக் கடற்கரையில் கரையொதுங்கிய அரிய வகை உயிரினம்



(யாழ்ப்பாணம்)

வேலணை, சாட்டிக் கடற்கரைப் பகுதியில் மிகவும் அரிதான கடல் பன்றி உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியது. நேற்று முன்தினம் மாலை கரையொதுங்கிய குறித்த கடல் பன்றியை மக்கள் சென்று பார்வையிட்டுச் சென்றனர்.

## ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் "அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்னும் விடயப் பொருளில் சிவநெறிச் செம்மல் இளம் சைவப் புலவர் க. கைலவாசன் ஆன்மீகவுரை ஆற்றவுள்ளார். (5-4)

## கிருஷ்ண ஜெயந்தி

(குப்பிழான்)

ஏழாலை புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெறும். ஸ்ரீதேவி பூமாதேவி சமேத வெங்கடேசப் பெருமாளுக்கு விசேட அபிஷேகம், பூஜை இடம்பெற்று வீதி உலாவும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் உறியடி உற்சவமும் இடம் பெறுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-4-18)

## வாக்காளர் இடாப்பு பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களைத் சேர்ந்த இடம் பயர்ந்த வாக்காளர்கள், தங்கள் சொந்த பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு 2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்த மீளாய்வினை மேற்கொள்ளுமாறும் மயிலிட்டித்துறை தெற்கு ஜே/248, மயிலிட்டித் துறை வடக்கு ஜே/251 ஆகிய பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது பருத்தித்துறையில் வசிப்பவர்களுக்கான பதிவுகள் நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை எரிஞ்ச அம்மன் கோவிலடியில் உள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்க கட்டடத்தில் பதிவு மேற்கொள்ளப் படும் என தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5)

# தங்கத்தின் விலை குறையாது

## அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தங்க நகை உற்பத்திக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரி 15 வீதத்தால் குறைக்கப்பட்டமையினால் ஏற்றுமதியில் அபிவிருத்தி ஏற்படுமென்றும் விலைக் குறைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படாதென்றும் அகில இலங்கை நகை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் விஜயகுமார் தெரிவித்தார்.

ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தற்போது தங்கம் ஒரு பவுணுக்கு மொத்த சராசரி விலையாக ஒரு இலட்சம் ரூபாவாக காணப்பட்டாலும் இறக்குமதி வரி 15 வீதம் குறைக்கப்பட்டமையானது, விலையின் மீது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தாது.

கடந்த 3 வருடங்களாக தங்கம் இறக்குமதி செய்யப்படவில்லை. இறக்குமதி இல்லாததன் காரணமாக சர்வதேச விலையின் அடிப்படையிலேயே இங்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் தங்கமே சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே வரி நீக்கத்தின் காரணமாக விலையில் சிறியளவு மாற்றங்கள் நிகழக்கூடுமே தவிர பாரிய மாற்றங்கள் ஏற்படாது என அவர் தெரிவித்தார். (ஜ-4)


# சேவை நலன் பாராட்டு



திரு.வல்லிபுரம் முத்துக்குமாரு

எமது பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றி 2020.09.09 இன்று ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.வல்லிபுரம் முத்துக்குமாரு அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு அவர்களது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய உளமார வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை

(3832)



# கேள்வி கோரல்

நாச்சிக்குடாச் சந்தி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கனப்பி கூரையிடலுக்கும், தளக்கல் பதித்தலுக்குமான மூலப்பொருள் தவிர்ந்த வேலைத்திட்டத்திற்கு கூலி அடிப்படையிலான கேள்வி கோரப்படுகின்றது. எனவே தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் மீளளிக்க முடியாத வைப்புத் தொகை 1,000.00 ரூபாவை செலுத்தியும் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையாக 10,000.00 ரூபாவை சங்கப்பணிமனையில் செலுத்தியும் 02.10.2020 வரை அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 03.10.2020 நண்பகல் 12.00 மணி வரையாகும். அன்றைய தினமே நண்பகல் 12.30 மணி அளவில் கேள்வி மனு திறக்கப்பட்டு கேள்வியாளர் தெரிவு செய்யப்படுவார். விண்ணப்பங்கள் யாவும் தலைவர், பூநகரி. ப.நோ.கூ.சங்கம், நாகதேவன் துறை வீதி, பூநகரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்- தா.அரியரத்தினம்,
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

(C-264)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532





# இணுவில் திருப்பதி

## அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயம்

## கிருஷ்ணஜெயந்தி உறியடி உற்சவம்

**09.09.2020 புதன்கிழமை**

காலை 5.00 :- பெரிய பெருமாள் திருமஞ்சனம்
காலை 7.30 :- பெருமாள் அடியார்களுக்கான தர்சனம் ஆரம்பம், விசேட திருவாராதனை தொடர்ந்து அடியார்கள் 108 முறை திருவீதி வலம் வரும் வேண்டுதல் ஆரம்பம்
மதியம் 12.00 :- மணிக்கு விசேட பூஜை
மாலை 5.00 :- மணிக்கு பூஜை ஆரம்பம்

மாலை 5.30:- ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமாள் நவநீத கிருஷ்ணராக சர்ப்ப சேவையில் கருவறையில் இருந்து உறியடி உற்சவ புறப்படும் திருவீதி வலமும்.

**தொடர்ந்து உறியடி உற்சவம்**

மாலை 6.40 மாட வீதி சிறப்புற திருவமுது ஆராதனை நைவேத்தியம்
மாலை 6.45 முதல் இசை நாட்டிய சமர்ப்பணம்

**வீணாகான சமர்ப்பணம்**

இரவு 8.30 சுவாமி ஆலயம் திரும்புதல்
இரவு 8.45 பெருமாள் திருத்தொட்டில் சேவை, தாலாட்டு
இரவு 9.00 உற்சவ நிறைவு
தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணிவரை அபிஷேகம் ஆராதனை அடியார்களுக்கு காய நைவேத்தியம் வழங்குதல்

**தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு**

**10.09.2020** அதிகாலை 5.00 தீர்த்தம்,
சக்கரதிருமஞ்சனம் காலை 6.00 விரத பூர்த்தி

**19.09.2020 சனிக்கிழமை முதலாவது புரட்டாதி சனிவார உற்சவம், பிரமோற்சவ ஆரம்பம், கொடியேற்ற தினம்.**

ஆலய தர்மகர்த்தா, உபயகாரர். 0777252476

(3826)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. புடைவைக்கடை ஊழியர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11173 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 49 ¼ செவ் 9 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. அரச உத்தியோகத்தர் (விவசாய திணைக்களம்)<br>எதிர்பார்ப்பு: அரச,உயர் தனியார் உத்தியோகமுள்ள மணமகன்<br>தொ.இ: G/9064 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: சூரி, செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சொந்த மருந்துக்கடை.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11174 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: HNDA<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/9065 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 33 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc (Hons) Bussiness information system IT Executive (private)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11175 | பிறப்பு: 1978 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர் மதம் மாறி கிறிஸ்தவத்திற்கு வருவோரும் ஏற்கப்படும் இவர் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/9067 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி. மருந்தியலாளர் சொந்தமாக மருந்தகம் வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11176 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: IT Dip. Accounts Assistant (private)<br>எதிர்பார்ப்பு:. லண்டன் மணமகன் மட்டும்<br>தொ.இ: G/9078 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





கண்டாவளை வாதக்கால்மடம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

# வைத்தியர்கள் நியமனம் மக்கள் கோரிக்கை நிறைவேறியது

(நெளுக்குளம்)

செட்டிகுளம் ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் தற்காலிகமாக இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் நேற்று முன்தினம் கடமையைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அண்மையில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மக்களுடன் கலந்துரையாடியதுடன், வைத்தியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுப்பதாக தெரிவித்த தையடுத்தே அந்த போராட்டம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய குறித்த நியமனத்தை ஒரு கிழமைக்குள் பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# வீதியை புனரமைப்பு செய்யுமாறு பிலக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு கிராமத்திற்கான பிரதான வீதி புனரமைப்பிற்காகக் கொட்டப்பட்ட மண் இதுவரை குவியல்களாக காணப்படுவதனால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிரதேசத்திற்கு உட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான பிலக்குடியிருப்பு கிராமத்தின் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட இவ்வீதியினை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்களால் தொடர் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

இந்த நிலையில் குறித்த வீதி புனரமைப்பு பணிக்காக தெரிவு செய்யப்பட்டு அதனைப் புனரமைப்பதற்கான கிரவல் மண் போடப்பட்டு பல மாதங்களாகியும் மண் குவியல்களாகவே காணப்படுகின்றன.

இவ்வாறு கிரவில் மண் குவியல்களாக காணப்படுவதனால் தாங்கள் போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பிலக்குடியிருப்பு மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியினை உரிய முறையில் புனரமைத்துத் தருமாறு குறித்த கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# கட்டி முடிக்கப்பட்ட பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கப்படவில்லை என மக்கள் விசனம்

(வவுனியா)

வவுனியாவில் கட்டி முடிக்கப்பட்ட தாய், சேய் பராமரிப்பு நிலையக் கட்டடம் கடந்த ஐந்து வருடமாக திறந்து வைக்கப்படாமல் உள்ளது.

இதனால் தாய்மார் பெரிதும் பாதிப்புற்று வருவதாகவும் இந்நிலையத்தை திறந்து வைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.



தனியாக அமைக்கப்பட்டுள்ள தாய், சேய்பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கப்படாமல் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் அரசாங்கத்தின் வடக்கு அபிவிருத்தி திட்ட நிதி ஒரு மில்லியன் ரூபாயில் அமைக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்தும் குறித்த தாய், சேய் பராமரிப்பு நிலையம் மக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்படவில்லை.

எனவே குறித்த நிலையத்தை திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கையினை அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரி வருகின்றனர். (5-4-299)

# கொரோனா காலத்தில் கடன் கட்டாதவர்களை தடை விதிக்கும் திட்டத்திற்குள் உள்வாங்காதீர்

## மத்திய வங்கி ஆளுநரிடம் திலீபன்

(நெளுக்குளம்)

நிதி நிறுவனங்களில் கடன் பெற்று அதனை கொரோனா காலத்தில் செலுத்த முடியாது போனவர்களை வங்கி செயற்பாடுகளுக்கு தடை விதிக்கும் திட்டத்திற்குள் உள்வாங்காதீர்கள் என மத்திய வங்கி ஆளுநரிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் மத்திய வங்கியின் ஆளுநருடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நுண்கடன் தொடர்பிலான கலந்துரையாடலின்போதே குறித்த கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய வங்கியின் ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன.

குறிப்பாக கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது தொழில் துறையை மீளக் கட்டியெழுப்ப வசதியாக அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களின் ஊடாக 25 மில்லியன் வரையில் 4 வீத வட்டிக்கு கடன் பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்களின் நிலைமைகள் தொடர்பாகவும் மத்திய வங்கி ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அவ்வாறு கடன் பெற்றவர்கள் மீது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சமூகத்திற்கு ஒவ்வாத நடைமுறைகள் தொடர்பில் முக்கியமாக சுட்டிக்காட்டப்பட்டது எனவும் தெரிவித்தார். (5-4-299)




# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இல்லத்தின் பரமலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைவராக ச.மோகனபவன், செயலாளராக கு.பகீரதன், பொருளாளராக சி.பத்மசிறி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சித்த மருத்துவமும் ஓகக்கலையும் (யோகக்கலை)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

யோகமானது எட்டுப்படி நிலைகளைக் கொண்டது. ஆசனங்கள், பிராணாயாமம் போன்றவற்றை முறையாகக் குரு துணையுடன் கற்றுக்கொண்டு பயின்று வந்தால் ஏராளமான நன்மைகள் கிடைக்கும். யோகவழி என்பது ஞானவழி படைக்கப்பட்ட எல்லோரும் யோகத்தின் எல்லையை அதாவது நல வாழ்வு, உயர் ஞானம், அமைதி, பேரின்பம் (Healthy life,Wisdom, Peace, bliss) போன்றவற்றை அடைய வேண்டும் என்பதே திருமூலர் போன்ற சித்தர்களின் எதிர்பார்ப்பாக இருந்துள்ளது.


**யோகத்தின் எட்டுப்படி நிலைகளாவன,**

1. இயமம் - தீயவற்றை செய்யாது இருத்தல்.
2. நியமம் - அன்பு, பொறுமை, தூய்மை, அருள் போன்ற நல்லவற்றைச் செய்தல்.
3. ஆசனம் - யோக இருக்கை நிலைகள் அதாவது மனதிற்கும், உடலிற்கும் தொடர்பு ஏற்படுத்தும் பயிற்சி.
4. பிராணாயாமம் - (வெளி நிலைப்பயிற்சி) உயிர் ஆற்றலின்பரிமாணத்தினை விரிவுபடுத்தும் பயிற்சி (Expansion of the dimension of the life force) வாழ்நாளினை அதிகப்படுத்தும் பயிற்சி.
5. பிரத்தியாகாரம் - வெளிமுகமாகச் சென்று அலையும் மனதினை உள்முகமாக நிறுத்திப் பழகும் பயிற்சி.
6. தாரணை - ஒருமுகப்பட்ட மனதினை அலைபாயாமல் நிலைபெறச் செய்தல்.
7. தியானம் - இறை ஆற்றலை இடைவிடாமல் நினைத்திருப்பது.
8. சமாதி - உயிர் இறை ஆற்றலுடன் ஒன்றுபட்டுவிட்ட நிலை.

இந்த எட்டுப்படி நிலைகளையும் முறையாகப் புரிந்து கொண்டு பயில வேண்டும். அதற்கு சிறப்பான நுண்ணியதெளிவான அறிவுவேண்டும்.

யோகப் பயிற்சி செய்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய கோட்பாடுகளையும்





உயிர் உடலில் நீடிக்க வழியையும் பின்வரும் பாடலில் திருமூலர் விளக்குகிறார்.

**அண்டம் சுருற்கில்**
**அதற் கோர் அழிவில்லை**
**பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்**
**உண்டி சுருக்கில்**
**உபாயம் பலஉள**

யோகப் பயிற்சியினால் புலனடக்கம் தானாக ஏற்பட்டுவிடுகிறது. எப்போதும் மனிதன் தன் மனதில் எழும் ஆசைகளை துறந்து தனக்குத் தானே மகிழ்ச்சியுள்ளவனாக இருப்பானேயாகில் அவன் திடபுத்தி உள்ளவன் என்று கருதப்படுகிறது.

யோக தீட்சை என்பது குரு யோக மார்க்கத்தால் சீடனது உடலுள் பிரவேசித்து அவனது ஆன்மாவை கிரகித்து சிவன் திருவடியில் சேர்ப்பிக்கும் தீட்சை வகையாகும்.

யோகம் என்பது மக்கள் தம் உடலையும், உள்ளத்தையும் அடக்கியாளக் கண்ட ஓர் அறிவியல் கலையாகும். யோகப் பயிற்சியில் சித்திபெற்ற அறிஞர்கள் இயற்கையை தன்வயப்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்கள்.

இந்த யோகம் என்றும் அரும்பெரும் ஆன்மீகக்கலை நம் முன்னோர் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்ட அரும்பெரும் கலை. இக் கலை இன்று சைவ சயம சாத்திரங்களில் அழகுற மிக நுணுக்கமாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. யோகத்தை சிவயோகம் என்பதும், இது சிவனார் மக்களுக்கு உபதேசித்துக் கொடுத்த கலை என்பதும் தெரிந்ததே. உலகிலே முதன் முதலாக யோகக் கலையைக் கண்டவர்கள் சிவனை வழிபடும் சிவநெறியாளர்களே.

யோகாசன முறைகளை முறையோடு பின்பற்ற வேண்டும். உள்ளுறுப்புக்கள் தான் யோகாசனத்தில் முழுக்க பயன்படுகின்றன. உள்ளுறுப்புக்கள் தூய்மை பெறவும் வலிமை பெறவும் பயிற்சி செய்யும் நேரத்தில் மிகவும் நியமத்துடன் பயபக்தியுடன் நெறி பிறழாது செய்ய வேண்டும்.

யோகப் பயிற்சியின் விளைவாக, தேகத்திற்கு வந்தநோய்களை போக்கியும் இனி நோய்கள் வராமல் காத்தும் உன்னத உடலை உருவாக்கும்.

உள்ளுறுப்புக்களையும், வெளியுறுப்புக்களையும் தூய்மைப்படுத்தி அது தன் பணிகளைச் சீராக செயற்படுத்தக் தூண்டுகிறது.

சாதாரணமாக செயற்படும் ஒருவனுடைய செயலாற்றலை மிகுதிப்படுத்துவதுடன் மனவளத்தினையும் உற்சாகப்படுத்துகிறது.


ஆசனங்களை முறையோடு செய்து வந்தால் உடல்வளம் பெறுவதுடன் மிகவும் சுறுசுறுப்போடும் விரைவாகவும் அன்றாட வாழ்வில் இயங்க முடியும்.


முதுகெலும்பு எளிதில் வளைந்து இயங்கும் ஆற்றலை பெறுவதால் உடலில் ஒத்துழைப்பு உயர்ந்த அளவில் கிடைக்கிறது.

இதயம், நுரையீரல்கள் மற்றும் மூளைப்பகுதிகள் சிறப்புடன் பணியாற்றுகிறது. இரத்த ஓட்டம் உடலெங்கும் இயல்பாக ஓடி உடலை பாதுகாக்கிறது.

தோல், நரம்பு மற்றும் அனைத்து பகுதிகளுக்கும் ஆசனப்பயிற்சிகள் உரமூட்டுகின்றன.

யோகமுறைகளில் பொதுவான நோக்கமெல்லாம் ஒன்றுதான். என்றாலும் அடையும் குறிக்கோளை அணுகிச் செல்கின்ற வழியில்தான் சற்று வித்தியாசப்படுகின்றன. ஏனெனில் அவரவர்க்கு ஏற்ற வழிகளில் இயைந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி செய்து பயன் பெற வேண்டும்.





### யோக முறையின் பிரிவுகள்

**இராஜயோகம்:-**
உடலை ஓரிடத்தில் அமர்த்தி வைக்கின்ற இருக்கைகள் மூலம் உடலைவிட மனதிற்கு மட்டுமே சிறந்த பயிற்சியை அளிப்பது.

**ஹடயோகம்:-**
உடல் இருக்கைகளே பெரிதும் வற்புறுத்தி அதனை மேலும் மேலும் செய்ய வைத்து யோகப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் தந்து உடலைப் பயன்படுத்தி அதன் மூலம் மனதைப் பண்படுத்துவது.

**கர்மயோகம்:-**
எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் கடமையே பிரதானம் என்றும் மனிதர்களுக்குச் செய்யும்சேவையே மாபெரும் சேவை என்பதை முழு மூச்சாகக் கொண்டு பணியாற்றி வருவது.

**ஞானயோகம்:-**
மெய்ஞான அறிவினை மிகுதிப்படுத்த முயலுவது.

**பக்தியோகம்:-**
பரம் பொருளிடம் தன் வாழ்வினையே சமர்ப்பித்து, தன்னைச் சரணாகதியாக்குகின்ற பக்தியிலே ஈடுபடுத்துகின்ற தன்மையை வளர்ப்பது.

**மந்திரயோகம் :-**
ஒலிப்பாடுகளின் அதிர்வலைகள் பற்றிய அறிவியலில் ஈடுபட்டு மந்திரங்கள் மூலம் மேன்மை நிலை அடைய உதவுகிறது.

**கீதாயோகம்:-** ஆண்டவனை நினைத்து உருகி அவனையே ராகத்துடன் தன்னை மறந்து பாடல் பஜனைசதாகாலமும்செய்தல்.

திருமூலர் யோகத்தி நாடி-சுத்தி பிராணாயாமம், மூச்சுப்பயிற்சிக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பிராணனை அடக்கி ஆள்வதே பிராணாயாமம். இதனை நேராக அடக்கி ஆள முடியாது.

இதன் செயலாக சுவாசத்தை நெறிப்படுத்துவதன் மூலமே இதனை அடக்கி நெறிப்படுத்த முடியும். பிராணன் வசப்பட்டால் உயிர் உறுதியாகி உலக சுகம் யாவும் வரமாகிவிடும். நோய் நீக்கும் யோகாசனங்களை செய்யும்போது குருவின் வழி நடத்தலில் மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய பத்திய முறைகளையும் கடைப் பிடித்தல் வேண்டும்.

(முற்றும்)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

13

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**1987ஆம் ஆண்டு 15ம் இலக்க சட்டத்தினுடைய கட்டளைகள், 1988 ஆம் ஆண்டு நிதியியல் மற்றும் நிர்வாக ஏற்பாடு, கூட்டங்களை நடத்துவது தொடர்பான செயற்பாடு, உப விதிகள் மற்றும் சட்டத்துடன் தொடர்புபட்ட ஏனைய சட்ட திட்டங்கள் தொடர்பாக அறிந்திருத்தல் மற்றும் சபை தீர்மானங்களை மேற்கொள்ளும் போது விளக்கத்துடன் கதைத்தல் மற்றும் செயற்படல் என்பன உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பொறுப்புக்களாகும்.**

3. பிரதேச சபைக்கு உரிய அலுவல்கள், அதிகாரங்கள், வளங்கள் மற்றும் கட்டமைப்பு தொடர்பாக பூரண விளக்கத்துடன் செயற்படல்.

4. நிறுவனத்தினுடைய வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை வரைய உதவி செய்தல். தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்குதல்.

5. வரைந்த திட்டத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு. தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஒத்துழைப்பு தருதல்.

6. வருடாந்த வரவு-செலவு திட்ட ஆவணத்தினை வரைய ஒத்துழைப்பு வழங்குதல். தேவையான விதந்துரைகளையும், விபரங்களையும் வழங்குதல். மேலும் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதிலும் நடைமுறைப்படுத்துதலிலும் வழிகாட்டுதல்.

7. நிறுவனத்தினுடைய அலுவல்களை முன்னெடுத்துச் செல்வதில் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதில் ஒத்துழைப்பு வழங்குதல்.

8. மக்கள் நலன் கருதி எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

9. விடயங்களை பயனுள்ளதாகவும், திறன்மிக்கதாகவும் முன்னெடுத்துச் செல்ல தேவையான வழிகாட்டுதலினை.பெற்றுத்தரல்.

10. சபையின்வருமானவழிகளை மேம்படுத்த வழிகாட்டுதல்.

11. பிரதேசத்தில் உள்ள மக்கள் தேவைக்கேற்ப, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏற்ப உப விதிகளை வழங்குதலிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

12. மக்கள் தேவைக்கேற்ப வசதிகளினையும், சேவைகளினையும் வழங்குவதற்கு வழிகாட்டுதல்.

13. சபையினுடைய நிதி, நிர்வாகத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைத்தல்.

14. சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் நிலையான சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் அவற்றை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துமாறு சபையின் அவதானத்திற்குக் கொண்டு வருதல்.

15. சபையின் நிதியினால் அல்லது வேறு நிதியத்தினால் முன்னெடுக்கப்படுக்கின்ற தொழிற்சாலை மற்றும் சேவைகளை கண்காணித்தல் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக ஏதாவது இருப்பின் சபைக்கு அறியப்படுத்துதல்.

16. சபையினால் அல்லது ஊழியர் குழாமினால் செய்யப்படுகின்ற தவறுகள் மற்றும் வஞ்சகம், ஊழல் தொடர்பாக சபைக்கு அறிவித்தல் மற்றும் அவற்றினை தடுப்பதற்குத் தேவையான உபாயங்களை சபைக்கு முன்வைத்தல்.

**உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஆட்சி பிரதேசத்திற்குள் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களினை பிரதேச மக்களுக்கு தெரியப்படுத்துதல், இணைத்தல் மற்றும் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல் என்பவை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பொறுப்புக்களாகும்.**

17. உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஆட்சி பிரதேசத்திற்குள் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களினை பிரதேச மக்களுக்கு தெரியப்படுத்துதல், இணைத்தல் மற்றும் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

18. உள்ளூராட்சி நிறுவனங்களாவன மக்களுக்காக இருக்கின்ற நிறுவனங்கள் என மக்கள் நினைக்கும் அளவிற்கு மிகவும் வெளிப்படையாக அலுவல்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

### பிரதேச சபையின் செயலாளர் பதவி

பிரதேச சபையின் அலுவல்கள் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். பிரதேச சபையின் செயலாளர் பதவியானது முகாமைத்துவ உதவி சேவையின் மிக உயர் நிலை பதவி ஆகும். உயர்நிலை பதவி ஒன்றின் மூலம் இடைவெளி நிரப்ப முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அதற்கு கீழ் நிலை பதவியிலிருந்து நிரப்பப்படுகின்றது.

பிரதேச சபை சட்டத்தின் 7 ஆம் அத்தியாயத்தில் செயலாளர் நியமனம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தந்த மாகாண அரசாங்கங்கள் சேவை ஆணைக்குழுவுக்கும், மாகாண சபையின் பிரதான செயலாளர் அல்லது உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் செயலாளரை நியமிக்கும் அதிகாரம் இருக்கின்றது.

நகர சபைக்கும் செயலாளரே நியமிக்கப்படுகின்றார். ஆனால் மாநகர சபைக்கு செயலாளருக்கு பதிலாக மாநகரசபை ஆணையாளர் ஒருவர் இருப்பார். இவர் நகர பிதாவுக்கு அடுத்த பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். (மாநகர சபைச் சட்டம் 170-172).

### பிரதேச சபையின் செயலாளரின் பொறுப்புக்கள்

செயலாளர் உட்பட ஏனைய அனைத்து அதிகாரிகளுக்கும் கடமைகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவதனை தலைவர் செய்ய வேண்டும். வழங்கப்படுகின்ற அதிகாரங்கள் ஆவணங்கள் ஒன்றில் எழுதப்பட்டு சான்றளிக்கப்படல் அவசியமாகும். ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தினை மீறிப் போய் அதிகாரங்கள் இல்லாமல் செயற்படுவதற்கு எந்த அதிகாரிக்கும் இயலாது.

பிரதேச சபையின் நிதி நிர்வாக ஏற்பாடு 2(ஈ) யில் குறப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க சபையின் ஊழிய குழாமினை நிர்வகித்தல் செயலாளருடைய பொறுப்பாகும். அங்கு அவர்களுக்கு கடமைகளினை ஒப்படைத்தல், அக்கடமைகள் காலதாமதமின்றி சரியான முறையில் இடம்பெறுகின்றது என்பதனை உறுதி செய்தல். பிரதான நிர்வாக அதிகாரி என்ற ரீதியில் செயலாளரின் கடமையாகும்.

**பிரதேச சபையின் நிதி நிர்வாக ஏற்பாடு 2(ஈ) யில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க சபையின் ஊழிய குழாமினை நிர்வகித்தல் பிரதேச சபையின் செயலாளருடைய பொறுப்பாகும். அங்கு அவர்களுக்கு கடமைகளினை ஒப்படைத்தல், அக்கடமைகள் காலதாமதமின்றி சரியான முறையில் இடம்பெறுகின்றது என்பதனை உறுதி செய்தல். பிரதான நிர்வாக அதிகாரி என்ற ரீதியில் செயலாளரின் கடமையாகும்.**

சபையின் தீர்மானங்கள் மற்றும் கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு தலைவரிற்கும் சபைக்கும் ஒத்துழைப்பு வழங்கும் அதிகாரி செயலாளரே ஆவார். அவரின் கடமைகள் பின்வருவனவாகும்

01. ஊழிய குழு முகாமைத்துவம்.

02. சபையின் கூட்டங்கள் தொடர்பாக அனைத்து அலுவல்களையும் தலைவரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்படுத்துதல்.

03. சபைக்கு கிடைக்கும் வருமானங்களை சேகரிக்கும் அதிகாரம் உடைய அதிகாரியாக செயற்படுதல்.

04. தலைவரிற்கு, மக்கள் பிரதிநிதிகளுக்கு (உறுப்பினர்களுக்கு) மற்றும் ஊழியர் குழாமிற்கு ஆலோசனைகளை வழங்குதல், சட்ட சிக்கல்களை விளங்கப்படுத்துதல், தெரியப்படுத்துதல்.

05. சபையின் நிதி முகாமைத்துவ செயற்பாடு மற்றும் கட்டளைகளுக்கு கீழ்ப்பட்டு முன்னெடுத்தல்.

06. சபைக்குச் சொந்தமான அனைத்துப்பொருள், சொத்துக்களையும் பாதுகாத்தல், சொந்தமாக்கிக் கொள்ள செயற்படுகின்றமை, சொந்தமாக்கலின் உத்தரவினை பெற்றுக் கொள்ளுதலும், மேம்படுத்துதலும்.

07. சபை அதிகாரி பிரதேசத்திற்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தலில் பிரதான அதிகாரியாக செயற்படல்.

08. பொதுமக்கள், வரி செலுத்தும் போது வேறு நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு அலுவல்களை முன்னெடுத்தல்.

உள்ளூராட்சி நிறுவனங்களினுடைய ஊழிய குழாமிற்கு வேலை பிரித்து கொடுப்பதில் கடமைப் பட்டியல் ஒன்றினை வெளியிடுதல் பின்பற்றப்படுகின்றது. சாதாரணமாக வெளியிடும் கடமை பட்டியல் ஒன்றில் அதிகாரி ஒருவருக்கு வழங்கப்படும் கடமைகளின் எண்ணிக்கையின் மூலம் பொறுப்பினை நிறைவேற்றக் கூடிய முறைமைகள் தெளிவாக குறிப்பிடுவதில்லை. நிறுவனத்தினுடைய ஊழிய குழாமிற்கு வெளியிடப்பட்டிருக்கும் கடமைப்பட்டியலிற்கு இணங்க அதிகாரிகளுக்காக கடமை விபரங்களை உள்ளடக்கிய கடமைப்பட்டியல் ஆவணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இதற்காக பிரதேச சபை அதிகாரிகளுக்கு உதவி செய்யும் நோக்கில் பிரதேச சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தினருக்கான மாதிரி கடமைப் பட்டியல் ஆவணம் "Christoffel-Blinden Mission- CBM" நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "பிரதேச சபை மற்றும் விசேட தேவையுடைய நபர்கள்" என்னும் நூலில் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கு உபவிதிகளை (துணைவிதிகள்) வரைதல் (By Laws)

உலகில் எந்த நாடாக இருந்தாலும் அந்நாட்டின் சட்ட முறைமையானது அநேகமாக சட்டங்களினாலும் உப விதிகளினாலுமே உருவாக்கப்பட்டுள்ளன. அரசியல் யாப்பே ஒரு நாட்டின் உயரிய சட்டமாக கருதப்படுகின்ற அதே வேளை அதனை அடிப்படையாக வைத்து வரையப்படுகின்ற கட்டளை விதிகள் சட்டங்களாக கருதப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டளை விதிகளுக்கு இணங்க அரசியல் யாப்பினது அனுமதியுடன் உருவாக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள், உத்தரவுகள், ஏற்பாடுகள் மற்றும் உபவிதிகள் என்பன துணை நிலை சட்டங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

அதாவது உள்ளூராட்சி மன்றச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டிராத ஆயினும் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் கடமைகளையும் அமுலாக்கும் பொருட்டு தேவையான சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உண்டு. அத்தகைய சட்டங்கள் துணைவிதிகள் எனப்படும்.(படம்-4)

(தொடரும்...)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022



விருச்சிக இராசி வாசகர்களே!

ராகு-கேதுக்களின் பெயர்ச்சி செப டெம்பர் முதலாம் திகதி நிகழ்ந்தது. அந்த மாற்றத்தின் விளைவாக மிகு ந்த நற்பலன் அடையும் இராசிகளில் ஒன்றாக உங்கள் இராசி அமைகிறது. காரணம், இதுவரை அஷ்டமத்தில் ராகுவும் 2 ஆம் இடத்தில் சஞ்ரித்து வந்த கேதுவும் நிலைமாறி ஜென்ம கேதுவும் சப்தம ராகுவுமாக வரு கிறார்கள்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை தற்போது நடந்து வரும் ஏழரைச் சனி இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது. எனவே உங்கள் எண்ணங்கள் எல் லாம் ஈடேறும். நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார்.

வயது வந்த ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி நல்ல வரன்கள் வந்து சேரும். மங்கல ஓசை இல்லத்தில் கேட்கும் வாய்ப்பு உருவா கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். அரசியலில் செல்வாக்குள்ள ஒருவர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கி மகிழும் யோகமும் உண்டு.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். செலவு களை யோசித்துச் செய்வீர்கள். சிறுசிறு விரயங்கள் வந்தாலும் அதைப்பற்றிக் கவ லைப்பட வேண்டாம். அதற்கேற்ற விதத் தில் வரவுகள் உங்களுக்கு வந்து சேரும். சமூகப்பற்று மிக்க உங்களுக்கு நல்ல பதவிகள் கிடைக்கலாம். உயர் அதிகாரிக ளின் பழக்கத்தால் ஒருசில காரியங்கள் விரைவில் நடைபெறும். உடல் நிலை யில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (1.9.2020 முதல் 4.1.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ் வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, வருமானம் கூடுதலாக இருக்கும். நவீன பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. தொழில் வெற்றி நடைபோடும். கௌர வப் பதவிகள் கிடைக்கலாம். கட்டடம் கட்டும் யோகமும் கைகூடும் உடல்நலம்

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் கேது பகவான் முதலில் புதன் சாரத்திலும், பிறகு சனி சாரத்திலும், அதன் பிறகு குரு சாரத்திலுமாக சஞ்சரிக்கப் போகின்றார். 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கக் கூடிய கேது பகவான், நிகழ்காலத் தேவை களைப் பூர்த்தி செய்வாரா? என்று பார்ப் போம். பாதசார அடிப்படையில் பகைக் கிர கத்தின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, அதற்குரிய பரிகாரங்களையும் வழிபாடுகளையும் செய்தால் நற்பலன் களைப் பெற முடியும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (1.9.2020 முதல் 9.5.2021 வரை)

புதன், உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியாவார். எனவே தடைப்பட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். வியாபாரத் தொடர்புகள் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பக்கபல மாக இருப்பர். சேமிப்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வும் சலுகைகளும் எதிர்பார்த்த படி கிடைக்கும். அலுவலகத்தில் மேலதி காரிகளின் ஆதரவு திருப்தி தரும்.



குரு பகவான், உங்கள் இராசிக்கு தன பஞ்சமாதிபதி ஆவார். எனவே அவர் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது செல்வநிலை உயரும், செல் வாக்கு மேலோங்கும். எடுத்த காரிய த்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லம் தேடி நல்ல தகவல் வரலாம். கல்யாணக் கனவு

# கேது உங்கள் இராசியிலே... கீர்த்தியும் புகழும் இனிச்சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

அதன் பிறகு டிசெம்பர் 26 ஆம் திகதி மகர இராசிக்குச் சனி செல்கின்றார். இப் பொழுது ஏழரைச் சனி முழுமையாக விலகிவிட்டது. எனவே தொட்ட காரிய ங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் மிகச்சிறப்பாக இருக் கும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். அதன் பிறகு 2021 ஆம் வருடம் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கும்ப இராசிக்கு குரு செல்கின்றார். அப்பொழுது அவர் உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார்.



### நல்ல திருப்பம் தரும் ராகுநம்பிக்கைகள் நடைபெறும் கேது

ராகு இப்பொழுது சஞ்சரிக்கப் போகும் இடம் ஏழாமிடமாகும். இது 'களத்திர ஸ்தானம்' என்று அழைக் கப்படும் இடமாகும். எனவே திருமண

சீராகும். புதிய ஒப்பந் தங்களில் கையெழுத் திடும்வாய்ப்பு உண்டு.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (5.1.2021 முதல் 12.9.2021 வரை)

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதி சந்திரன் ஆவார். பொதுவாக ஒன்பதாமிடம் என்பது பிதுரர்ராஜித ஸ்தானம் மட்டுமல்ல, ஞானம், கல்வி, தீர்த்த யாத்திரை, தெய்வ அனுகூலம், தந்தை வழி உறவுகள், தந்தைவழி சொத்துக்கள், ஆலயத்திருப்பணி, கடல் கடக்கும் வாய்ப்பு, பயணங்களால் பலன், பொன், பொருள் சேர்க்கை ஆகியவற்றை எல்லாம் குறிக்கும் இடமாகும். எனவே அதன் சாரத்தில் ராகு வரும் பொழுது எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக் கும். தந்தை வழி உறவில் ஆதாயம் உண்டு. ஊதிய உயர்வுடன் உத்தியோ கம் அமையும். வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.9.2021 முதல் 20.3.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரி யனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, அற்புதமான பலன்கள் கிடைக்கும். தொழில் ஸ்தானாதிபதியாக சூரியன் விளங்குவ தால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வியாபாரப் போட்டிகள் அகலும். பணியா ளர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப் பார்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ், கௌரவம் கூடும். அரசு வழிகளி லும் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

சேமிப்பு அதிகரித்து சுப காரியங்களுக்காகச் செல விடுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மகத்தான பலன் கிடைக்கும். இளைய சகோதரத்தின் ஒத்துழைப்பு உண்டு. ஏற்றுமதி இறக்குமதி வணிகம் செய்பவர் களுக்கு இக்காலம் சிறப்பாகவும் இலா பம் தரும் விதத்திலும் அமையும்.

### சனி சாரத்தில் கேதுவின்




### சஞ்சாரம் (10.5.2021 முதல் 16.1.2022 வரை)

உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர் சனி பகவான். சகாய ஸ்தானம் மற்றும் சுகஸ்தான த்திற்கு அதிபதியான சனியின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, சகோதர ஒற்றுமை பலப்படும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடிவரும். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கடல் தாண்டும் முயற்சி கைகூடும். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். இடம், பூமியால் ஆதாயம் உண்டு. வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வழக்கு கள் சாதகமாக முடியும். உடல்நலம் சீராக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.1.2022 முதல் 20.3.2022 வரை)

கள் நனவாகும். காரிய வெற்றிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். தெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள். விலகிச் சென்ற உறவி னர்கள் விரும்பி வந்திணைவர். தேவைக்கேற்ற பணம் வந்துகொ ண்டே இருக்கும். மற்றவர்கள் பாராட் டும்படியான காரியங்களைச் செய்து மகிழ்ச்சியடைவீர்கள்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

ஜென்ம கேதுவால் சிறப்பான பலன் களைப் பெறவும் சப்தம ராகுவால் சந் தோசங்கள் அதிகரிக்கவும் சதுர்த்தி யன்று விநாயகரையும் மூலம் நட்சத் திரமன்று அனுமனையும் வழிபடுங் கள். பூஜையறையில் சரஸ்வதி படத்து க்கு மாலை சூட்டி கலைவாணி கவசம் பாடி வழிபடுவதோடு, லட்சுமி படம் வைத்து அஷ்டலட்சுமி கவசமும் பாராய ணம் செய்யுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு- கேது பெயர்ச்சி உங்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகின்றது. உடல்நலம் சீராகும். ஏழரைச் சனி விலகுவதால் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நடைபெ றும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவும் சகோ தர ஒற்றுமையும் சிறப்பாக உள்ளது. சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக் கும். குலதெய்வ வழிபாடும், ராகு-கேதுக்களுக்கு உரிய சிறப்பு வழிபாடும் முன்னேற்றம் தரும்.

(தொடரும்)

# எல்லை தாண்டி இந்தியப் படைகள் துப்பாக்கிச் சூடு-லடாக்கில் பதற்றம்



(காஷ்மீர்)

இந்திய-சீன எல்லைப் பகுதிகளில் ஒன்றான லடாக்கில் இந்தியப் படையினர் எல்லை தாண்டி வந்து சீனப் படையினரை எச்சரிக்கும் விதமாக நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில் எல்லையில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த சீனப் படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததாக சீன இராணுவத்தின் தெரிவித்தனர்.

லடாக் எல்லையான கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய-சீன படையினரிடையே கடந்த ஜூன் 15 ஆம் திகதி மோதல் ஏற்பட்டது. இதில் 20 இந்தியப் படையினர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு அதிகரித்தது. இரு நாடுகளும் எல்லை முழுவதும் படைகளை குவித்துள்ளன.

போர் பதற்றத்தை தணிக்கும் விதமாக இரு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மட்டம் உட்பட பல்வேறு மட்டங் களில் பேச்சுவார்த்தை நடை பெற்று வருகிறது. ஆனால், இந்த பேச்சுவார்த்தைகளில் பெருமளவு முன்னேற்றம் எதுவும் ஏற் படவில்லை.

இந்நிலையில் இந்தியா-சீனா இடையே மோதலுக்கு மிகவும் முக்கியமான காரணமாக கருதப்படும் பகுதிகளில் லடாக்கின் லே-யில் உள்ள பாங்காங் ஏரி பகுதியில் சீனாவின் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து சீன படையினரை எச்சரிக்கும் விதமாக இந்திய படையினர் நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சீன இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த நடவடிக்கை மிகவும் மோசமான நிகழ்வாகும். அபாயகரமான நடவடிக்கைகள் எடுப்பதை இந்திய தரப்பு உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என தெரித்துக்கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# உடல் உறுப்பு தானம் முதலிடம் வகிக்கும் ஸ்பெயின்



(மட்ரிட்)

உலகளவில் உடல் உறுப்பு தானத்தில் ஸ்பெயின் கடந்த 28 ஆண்டுகளாக முன்னிலை வகிப்பதாக ஸ்பெயின் சுகாதாரத்துறை அமைச்சர் சால்வடார் இல்லா தெரிவித்துள்ளார்.

உலக அளவில் 10 இலட்சத்தில் 50 பேர் உடல் உறுப்பு தானம் செய்கிறார்கள். ஆனால் ஸ்பெயின் நாட்டில் 10 இலட்சத்தில் 120 பேர் தானம் செய்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளின் மொத்த உடல் உறுப்பு தானத்தில் ஸ்பெயின் நாட்டின் பங்கு 20 சதவீதம் ஆகும். உலகின் மொத்த தானத்தில் ஸ்பெயின் நாட்டின் பங்கு 6 சதவீதமாக உள்ளது.

அதேநேரத்தில், ஸ்பெயின் அமெரிக்காவை விட இறந்த நோயாளிகளிடமிருந்து அதிகமான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது. உலகளவில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 6 சதவீதம் அதிகரித்து 146 840 ஆக உள்ளது. (2)

**நான் ஒரு தமிழ் பேசும் இந்தியன், ஹிந்தி தெரியாது போடா என்ற வாசகங்கள் அடங்கிய ரீசேட்டுக்கள் ட்ரெண்டாகி வருகிறது. கடந்த ஒருமாத காலமாக ஹிந்தி திணிப்பு குறித்த விவகாரம்தீவிரமாக எழுந்து**




**வருகின்றன. 'ஹிந்தி தெரியாததால் தமிழக மருத்துவர்களை வெளியேறச் சொன்ன சம்பவம் கொந்தளிப்பை ஏற்படுத்தியமையை அடுத்து பிரபலங்கள் பலர் சமூகவலைத்தளத்தில் ஹிந்தி தெரியாது போடா எனும் வாசகம் பொறிக்கப்பட்ட ரீசேட்டுகளை அணிந்து புகைப்படங்களை இட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.**

# கொரோனாத்

# உலக நாடுகளுக்கு விநி

# பணியை ஏற்கும் ய



(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தடுப்பு ஊசியை அதிக அளவில் கொள்முதல் செய்து, உலக நாடுகளுக்கு விநியோகி

# பெருந் தொற்றும் சமூகப் பரவலும் வாழ்க் இதை சமாளிக்க உலகம் இன்னும் தயா

## டெட்ரோஸ்

(ஜெனிவா)

அடுத்து வரும் வைரஸ் பெருந்தொற்றை சமாளிக்க உலகம் தயாராக இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் தெரிவித்துள்ளார்.

சீனாவில் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ் ஞானிகள் தீவிர முயற்சி மேற் கொண்டு வருகின்றனர். தடுப் பூசி கண்டுபிடிக்கும் முயற்சி யில் இறுதிக்கட்டத்தை எட்டி யுள்ளபோதும் உலகம் முழு வதும் 2 கோடியே 70 இலட் சத்துக்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வைரஸ் தாக்குதலால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் 9 இலட்சத்தை நெருங்கி

# பின்லேடன் கும்பலி காப்பாற்றக் கூடிய

## நூர் பின்லேடன் பரபரப்புத்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் மட்டுமே தீவிரவாதிகளிடம் இருந்து அமெரிக்காவை காப்பாற்ற முடியும் என்று, ஒசாமா பின்லேடனின் மருமகள் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்திய 4 தாக்குதல்களில் 2,977 பேர் கொல்லப்பட்டனர்.

25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு சூத்திரதாரியாக செயற்பட்ட ஒசாமா பின்லேடன், சம்பவம் நடந்த சில ஆண்டுகளுக்கு பின் அமெரிக்க இராணுவப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்நிலையில் ஒசாமா பின்லேடனின் மூத்த சகோதரர் யெஸ்லாம் பின்லேடனின் மகள் நூர் பின்லேடன் என்பவர், 'நியூயோர்க் போஸ்ட்' என்ற

# வெளிநாடு

## ...னாத் தடுப்பூசி
## ...விநியோகிக்கும்
## ...ம் யுனிசெப்



...க்கும் பணியை ஐ.நா. குழந்தைகளுக்கான நிதி அமைப்பு (யுனிசெப்) மேற்கொள்ளவுள்ளது.

உலகில் மனித அழிவுகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசியைத் தயாரிக்கும் பணியில் பல நாடுகளின் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.


இந்த நிலையில், கொவிட் -19 நோய்த்தொற்றுக்கான தடுப்பூசி தயாரிக்கப்பட்ட பிறகு அதை அனைத்து நாடுகளுக்கும் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக தடுப்பூசியைத் தயாரிக்கும் நிறுவனத்திடமிருந்து அதை அதிக அளவில் பெற்று அனைத்து நாடுகளுக்கும் விநியோகிக்கும் பணிக்கான தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளதாக யுனிசெப் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கொவிட்-19 நோய்த் தொற்றுக்கான தடுப்பூசியைக் கொள் முதல் செய்து உலக நாடுகளுக்கு விநியோகிக்கும் பெரும் சவாலை யுனிசெப் ஏற்கவுள்ளது. கொவிட்-19 நோய்த் தொற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உதவியை யுனிசெப் செய்யவுள்ளது.

தட்டம்மை, போலியோ உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஆண்டுதோறும் 200 கோடி அளவில் தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்து சுமார் 100 நாடுகளுக்கு விநியோகிக்கும் பணியை யுனிசெப் மேற்கொண்டு வருகிறது. அந்த அனுபவம் கொவிட்-19 தொற்றுக்கான தடுப்பூசியை விநியோகிப்பதற்கும் உதவும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## சீனாவின் கொரோனாத் தடுப்பூசி பாதுகாப்பானது
### பரிசோதனையில் உறுதி



(பீஜிங்)

சீன நிறுவனமான சினோவக் பயோடெக் தயாரித்த கொரோனாத் தடுப்பூசி பாதுகாப்பானது என 2 கட்ட பரிசோதனையிலும் உறுதியாகியுள்ளது.

கொரோனா வைரஸிற்கான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகின் பல்வேறு நாடுகள் களமிறங்கியுள்ளன. ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் கொரோனாத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் போட்டியில் முன்னிலையில் உள்ளன.

பல தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு அவை மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதனை செய்யும் முயற்சியில் பல நிறுவனங்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இந்த தடுப்பூசி சோதனையின் இறுதிக்கட்டமான 3ஆவது கட்டத்தில் பல தடுப்பூசிகள் உள்ளன. தற்போதைய நிலைப்படி, உலகம் முழுவதும் மொத்தம் 8 தடுப்பூசிகள் இறுதிக்கட்டப் பரிசோதனையில் உள்ளன.

அதில் 4 தடுப்பூசிகள் சீனாவைச் சேர்ந்தவை ஆகும்.

இந்நிலையில், சீனாவின் சினோவக் பயொடெக் என்ற மருந்து தயாரிப்பு நிறுவனம் உருவாக்கியுள்ள கொரோனாத் தடுப்பூசி பாதுகாப்பானது என உறுதியாகியுள்ளது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சீன அரசால் அவசர பயன்பாட்டிற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னதாகவே அனுமதி வழங்கப்பட்ட தடுப்பூசிகளில் சினோவக் தடுப்பூசியும் ஒன்று.

2 கட்டங்களாக நடத்தப்பட்டுள்ள இந்த தடுப்பூசி பரிசோதனையில் பங்கேற்றவர்கள் வயது அடிப்படையில் இளையோர், நடுத்தர வயதினர், முதியோர் என 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர்.

இந்த தடுப்பூசி சோதனையில் சினோவக் பயொடெக் நிறுவன ஊழியர்கள் குடும்பத்தினரும் 3 ஆயிரம் பேரும் பங்கேற்றுள்ளனர். ஆனால் இந்த இரண்டு கட்டப் பரிசோதனையில் மொத்தம் எத்தனை ஆயிரம் பேருக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டது என்ற முழு விபரத்தை சீனா வெளியிடவில்லை.

இந்த 2 கட்ட பரிசோதனையிலும் சினோவக் தடுப்பூசி பாதுகாப்பானது என தெரியவந்துள்ளது. தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களில் 90 சதவிகிதம் பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறிப்பிட்ட அளவில் அதிகரித்துள்ளது.

முதியோர் என குறிப்பிடப்பட்டுள்ள 60 வயதுக்கு மேலானவர்களுக்கும் இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதில் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தது தெரியவந்துள்ளது.

இந்த எதிர்ப்பு சக்தி இளையோர் மற்றும் நடுத்தர வயதினருடன் ஒப்பிடும்போது சற்று குறைவுதான் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னேற்றத்தை தொடர்ந்து சினோவக் தடுப்பூசி தற்போது இறுதிக்கட்டமான 3 ஆம் கட்ட பரிசோதனையில் உள்ளது. இந்த இறுதிக்கட்ட பரிசோதனையும் வெற்றி பெறும் பட்சத்தில் உலக அளவில் இந்த தடுப்பூசியை விற்பனை செய்ய சினோவக் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த 3 ஆம் கட்ட பரிசோதனைகள் பிரேசில் மற்றும் இந்தோனேசியாவிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## ...வாழ்க்கையில் நிரந்தரம்
## ...ம் தயாராக வேண்டும்
### ...ஸ் ஆதனாம்



...வருகிறது.

இந்நிலையில், அடுத்த பெருந்தொற்றை சிறப்பாக சமாளிக்க உலகம் தயாராக இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய டெட்ரோஸ், "இந்த கொரோனா வைரஸ் தொற்று தான் உலகின் கடைசி வைரஸ் பெருந்தொற்று அல்ல.

பெருந்தொற்றும், சமூகப்பரவலும் வாழ்க்கையின் உண்மையானவை என்பதை வரலாறு நமக்கு கற்றுக்கொடுத்துள்ளது. ஆனால், அடுத்த பெருந்தொற்று வரும் நேரத்தில் உலகம் தற்போதுள்ள தயார் நிலையை விட இன்னும் சிறப்பாகச் சமாளிக்க தயாராக இருக்க வேண்டும்' என்றார். (2)

## ...லிடமிருந்து நாட்டை
## ...யவர் ட்ரம்ப் மட்டுமே
### ...ப்புத் தகவல்



பத்திரிகைக்கு இந்த தகவலை தெரிவித்துள்ளார். 'உலகில் ஒரே ஒரு மனிதனால் மட்டுமே ஓசாமா பின்லேடன் கும்பலிடமிருந்து நம்மைக்காப்பாற்ற முடியும் அமெரிக்கஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் மட்டுமே அமெரிக்காவை காப்பாற்ற முடியும்.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் பைடன், அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதல் போன்று மற்றொரு தாக்குதல் அமெரிக்காவில் நிகழலாம் என்று நூர் பின்லேடன் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## கொரோனாவால் இதுவரை 7 ஆயிரம் மருத்துவ பணியாளர்கள் உயிரிழப்பு



(லண்டன்)

கொரோனாத் தொற்று காரணமாக இதுவரை 7 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனாத் தொற்றால் பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், சமூக பரவலால் பதைரப்பட்ட கொரோனா முன்களப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மெக்சிக்கோ, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிக அளவிலான மருத்துவப்பணியாளர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நாடுகளை விட மெக்சிக்கோவில் அதிக அளவாக 1,300 மருத்துவப் பணியாளர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

தென்னாபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிலும் கொரோனாத் தொற்று துரிதமாக பரவி வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று லண்டனைச் சேர்ந்த பொருளாதாரம் மற்றும் சமூக நீதி குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (2)

# தற்கொலை குண்டுதாரி சாராவின் மரபணு அறிக்கையை மீண்டும் ஆராய உத்தரவு

(கொழும்பு)

**சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணு பரிசோதனை அறிக்கையினை மீண்டும் ஆராய்ந்து மன்றிற்கு சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.**

குறித்த வழக்கு விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் ஐ.என்.ரிஸ்வானின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.



இதன்போது, நீதிமன்றத்திற்கு சாய்ந்தமருது தற்கொலைக் குண்டுதாரி என அறியப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரனின் தாயார் வருகை தந்திருந்தார்.

இதன்போது, கொழும்பில் உள்ள அரச பகுப்பாய்வுப் பிரிவிற்கு அவரை அழைத்துச் சென்று மரபணு பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், மேற்குறித்த விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்காக மேலதிக அறிக்கைகளை தாக்கல் செய்து மீண்டும் சந்தேக நபரான புலஸ்தினி மகேந்திரனின் தாயாரை அழைத்துச்செல்ல நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கடந்தகால விசாரணைகளில் சாய்ந்தமருது தற்கொலைத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட சாரா என்ற புலஸ்தினியின் மரபணு பரிசோதனை ஒத்துப்போகவில்லை என மன்றில் அம்பாறை விசேட குற்றவியல் பிரிவின் அதிகாரி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சவுதி அரசின் சலுகை

(கொழும்பு)

இலங்கை புலம்பெயர்ந்த எந்தவொரு தொழிலாளியும், அனைத்து வகையான செல்லுபடியாகும் அல்லது காலாவதியான வருகை விசாக்கள், மீள் நுழைவு விசா அல்லது வெளியேறும் விசாவுடன், விசா செல்லுபடியாகும் காலத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தை விட்டு வெளியேறுவதற்கு சவுதி அரசாங்கம் சலுகை வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேநேரம் அவர்கள் விமான நிலையங்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினூடாக வெளியேறும்போது எந்தவொரு கட்டணமும் அபராதமும் வசூலிக்கப்படாமல் ஐக்கிய அரபு இராச்சியத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

கொவிட்-19 தொற்று நோயால் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளின் அடிப்படையில் இது சவுதி அரசு எடுத்த தற்காலிக நடவடிக்கையாகும்.

சவுதி அரேபியா அரசின் இந்த முடிவு தற்போது திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளிக்கிறது.

இந்த முடிவு இரு நாடுகளும் தற்போது அனுபவித்து வரும் வலுவான இருதரப்பு உறவுகளையும் குறிக்கிறது மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சகம் மற்றும் ரியாத்தில் உள்ள இலங்கை தூதரகம் ஆகியவை சவுதி அதிகாரிகளுடன் கொண்டுள்ள ஈடுபாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

கொவிட்-19 தொற்று நோய் காலத்தில் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நலன்புரி நடவடிக்கைகளை வழங்குவதில் தங்கள் உதவிகளை வழங்கியதற்காக இலங்கை அரசு சவுதி அரேபிய அரசுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்தது. (ஐ-4)

# காலதாமதமின்றி ரயில்களை சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

காலதாமதமின்றி ரயில்களை சேவையில் ஈடுபடுத்தும் நோக்கில் உரிய நேரத்திற்கு பயணிக்காத ரயில்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்துத் துறை அமைச்சர் காமினி லொக்குகே பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய, ரயில் சேவைகள் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோவுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நாளாந்தம் சுமார் 400 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், சுமார் மூன்று இலட்சம் பயணிகள் ரயில் சேவையைப் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில், ரயில்கள் தாமதமாகி பயணித்துள்ளதன் விகிதாசாரம் 56 வீதமாகக் காணப்படுகின்ற அதே வேளை, 2018 ஆம் ஆண்டில் 59 வீதமாகக் காணப்படுகின்றது.



இந்த நிலையில், குறித்த விடயங்களை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூன்று இடையூறுகள்!

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார்...

"இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி!"

ஒரு நல்லவன்–ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி! இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி! என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை... இதற்கு என்னங்க விளக்கம்? என்றேன். அதன் பின்பு அதற்கு அவர் விளக்கம் கொடுத்தார்.

அதாவது...ஒரு ஒற்றையடிப் பாதையிலே எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருந்தார்கள். அது ஒரு வரப்பு என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்தப் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக் கொள்ள வேண்டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கின்ற அந்த இரண்டு பேருமே நல்லவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அவர்கள் என்ன செய்வார்கள். இவர் நேராக பாதையிலே வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார்...? அவர் பாதையிலே வரட்டும் என்று இவரும் விலகி கீழே இறங்கி நடந்து வருவார். அவருக்காக இவர் விட்டுக் கொடுக்கின்றார். இவருக்காக அவர் விட்டுக் கொடுக்கின்றார். ஆக அவர் நடுவிலே ஏற்கனவே உள்ள பாதை ஒன்று மொத்தம் மூன்று.

"அது தான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது. ஒரு நல்லவன்–ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால் ஒரே வரப்பிலே எதிரும் புதிருமாக வருகின்ற இரண்டு பேரிலே ஒருத்தன் நல்லவன்... ஒருத்தன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரிலே வருகின்றவனுக்கு வழிவிடுவான்.

கெட்டவன் வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டான். அவன் இறங்கட்டுமே நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான்.

இப்பொழுது இரண்டு பாதை தான் உண்டு. இது தான் ஒரு நல்லவன்–ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது. இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது எப்படி தெரியுமா?

ஒரே வரப்பிலே எதிரும் புதிருமாக வருகின்ற இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவன் இருப்பான். அவன் இறங்கட்டுமே என்று இவன் இருப்பான். இரண்டு பேரும் ஒரே பாதையில் தான் வந்து கிட்டிருப்பார்கள். இதுதான் இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது. இப்பதான் அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார். அதாவது... நமக்கு வருகின்ற இடையூறுகள் மூன்று வகை என்றார்.

அது எப்படி என்று கேட்டேன்.

நாம் ஒரு காரியத்தைத் தொடங்குகின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அதற்கு மூன்று வகையிலே இடைஞ்சல் வரலாமாம். நம்மாலேயே வருகின்ற இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம். நம்மைத் தவிர மற்றவர்களாலே வருகின்ற இடைஞ்சல் ஒரு வகை– இது ஆதிபௌதிகம். இயற்கையாக வருகின்ற இடைஞ்சல் மூன்றாவது ரகம் அதற்குப் பெயர்– ஆதி தெய்வீகம்.

நமக்கு பிடித்த ஒரு நல்ல சினிமா படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்தச் சமயம் பார்த்து நமக்கு வயிறு வலிக்கின்றது...இது எங்களிடம் இருந்தே வருகின்ற இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அந்தச் சமயம் பார்த்து பக்கத்திலே இருப்பவர்கள் காச் மூச் என்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இது வந்து அடுத்தவர்களாலே வருகின்ற இடைஞ்சல்... அந்தச் சமயம் பார்த்து இடி, மின்னல், பூகம்பம்,கரன்ட் போய்விடுகின்றது. இது இயற்கை செய்யும் இடைஞ்சல்.

இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக் கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி!சாந்தி! சாந்தி! என்று மூன்று தடவை சொல்வார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம். ஆத்யாத்மிகம்–ஆதி பௌதிகம்– ஆதி தெய்வீகம். எங்களுடைய 'இன்று ஒரு தகவல்' இலே இந்த மூன்று இடைஞ்சலும் இருக்கு.. எப்படித் தெரியுமா?

7-35 இற்கு உங்கள் நேரத்திற்கு நான் பேச ஆரம்பிக்கின்றேன்.. இல்லையா? இது அடுத்தவர்களாலே உங்களுக்கு ஏற்படும் இடைஞ்சல். சரியாக அந்த நேரத்திற்கு நான் பேச ஆரம்பிக்கின்றேன் இல்லையா? அது அடுத்தவர்களால் உங்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல். அந்த நேரம் பார்த்து எங்கள் ஊர் கரன்ட் கட் ஆகாமல் இருக்கு பாருங்கள். அது இயற்கை ஏற்படுத்தும் இடைஞ்சல். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## நோத்சீ லிமிடெட்

கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனம்

## வெற்றிடங்கள்

இலங்கையிலுள்ள தகைமையுள்ள பிரஜைகளிடமிருந்து கீழ்க் காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பொது முகாமையாளர்

**(a) தகைமையும் அனுபவமும்:**

1.பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக நிறுவனத்திலிருந்து முகாமைத்துவம்/ வர்த்தகம்/ மனித வளம்/ பொறியியல் துறையில் பெற்றுக் கொண்ட பட்டதாரிப் பட்டம்.

**அத்துடன்**

சம்பந்தப்பட்ட துறையில் ஒரு பட்டப்பின் படிப்பு தகைமை (முதுமாணி) அல்லது இப்பதவியின் பாடப் பரப்புடன் சம்பந்தப்பட்டதாக ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இணை அங்கத்துவம்.

**மற்றும்**

ஒரு கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது ஒரு நம்பகமான தனியார் நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்

2. இப்பதவியோடு தொடர்புபட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் முழுமையான அங்கத்துவம்.

**மற்றும்**

ஒரு கூட்டுத் தாபனம், நியதிகள் சபை அல்லது ஒரு நம்பகமான தனியார் நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவம்

**(b)** சம்பந்தப்பட்ட சம்பள குறியீட்டு இல. மற்றும் மாதாந்த சம்பள அளவு
**HM 1-3 2016** தரம் II -86,865- 15×2,270-120,915/- அத்துடன் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு, உத்தியோகபூர்வ வாகன வசதிகள் அல்லது மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக ரூ.50,000/- மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்

**(c)**வயது- வயது 35 வருடங்களுக்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

### கணக்காளர்

**(a) தகைமையும் அனுபவமும்:-**

**ICASL/CIMA/ACCA** வில் இடைநிலைத் தகைமை அல்லது முகாமைத்துவம்/ வர்த்தகத்தில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது முகாமைத்துவத் துறையில் **HNDA** முதலாவது பட்டம் அல்லது சமமான தகைமையைப் பெற்றுக் கொண்ட பின்பு ஒரு கூட்டுத்தாபனம் / சபை அல்லது ஒரு நம்பகமான நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் நிதியியலில் குறைந்தபட்சம் 3 வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**(b) உள்ளக விண்ணப்பதாரிகள்**

சம்பந்தப்பட்ட துறையுடன் பொருந்தக்கூடிய கனிஷ்ட முகாமையாளர் வகை JM 1-1 பதவியில் 5 வருட திருப்திகரமான சேவையை நிறைவேற்றிய அதே தகைமையையும் அனுபவத்தையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை பொருந்தாது:

**(c) சம்பந்தப்பட்ட சம்பள குறியீட்டு இல. மற்றும் மாதாந்த சம்பள அளவு**
**MM 1-1-2016 - தரம் II-53,175-10x1,375 - 15x1,910 - 95,575/-**
**(w.e.f.01.01.2020)** அத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**(d) வயது**

வயது 30 வருடத்திற்கு குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது. மேலே சொல்லப்பட்ட பதவிகளுக்கு கீழ்க்காணும் தகவுத் திறன் பொதுவாகப் பொருந்தும்.

**(e) ஏனையவை**

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்**

1.இப்பதவியின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும்.

2.சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**நியமனத்தின் தன்மை**

மேற்படி பதவி நிரந்தரமானதும் மூன்று வருட தகுதிகாண் காலத்தையும் கொண்டதாகும். அத்துடன் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி பெறுவதற்கு உரித்துடையவராவார். அத்துடன் கம்பனிக்கு பொருந்தக்கூடிய அரசு அனுமதித்த கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:-**

காலத்திற்குக் காலம் உரித்தான துறையில் விதிக்கப்படும் தேர்ச்சிகள் மற்றும் திறன்களை ஊழியரானவர் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள தெரிவு செய்தல் தகவுத்திறன் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக் குழுமத்தினால் தீர்மானிக்கப்பட்ட திறமையின் அடிப்படையில் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். கல்வி/தொழில்சார் தகைமைகள் மற்றும் முன்னைய தொழில் அனுபவங்களுடன் உறவினரல்லாத இரு பரிந்துரைப்பவர்களின் தொடர்பு விபரங்களுடன் உங்களது முழுமையான சுய தரவுகளுடனான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடுங்கள். 2020 செப்டெம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
**தலைவர்,நோத்சீ லிமிடெட், தலைமைக்காரியாலயம்,**
**இல.450, டி.ஆர்.விஜேயவர்த்தன மாவத்தை கொழும்பு - 10.**

(3835)



# கோர விபத்தில் இருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதி, நிட்டம்புவ பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். கட்டுநாயக்கவிலிருந்து கண்டி நோக்கி சென்ற தனியார் பேருந்தொன்று எதிர்த்திசையில் வந்த ஆட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் கலேன்பிதுனுவெவ பகுதியைச் சேர்ந்த ஹினால் குமார மற்றும் பிரசன்ன சிசிர குமார எனும் 37 மற்றும் 33 வயதான இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் விபத்து தொடர்பில் தனியார் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)

# பாரம்பரிய முறையில் ஏர்பூட்டு விழா




(கொக்கட்டிச்சோலை)

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஏற்பாட்டில் ஏர் பூட்டு விழா நேற்று செவ்வாய்க்கிழமை தான்தோன்றீஸ்வரர் ஆலய புனித பூமியில் பாரம்பரிய முறையைத் தழுவியதாக நடைபெற்றது. (ஜ-2)

# பொலிஸிற்கு சேவை செய்த நாய்களை ஏலம் விட வேண்டாம்

## பாதுகாப்பு செயலர் பணிப்பு



(கொழும்பு)

பொலிஸ் துறைக்கு சேவை செய்த நாய்களை ஏலம் விட வேண்டாம் என பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும், சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட பொலிஸ் நாய்களை ஏலம் விடக்கூடாது, அவற்றை இறக்கும் வரை பொலிஸ் பராமரிப்பில் வைத்திருக்க வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரட்னவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பொலிஸ் கென்னல்ஸ் பிரிவில் 10 வயதுடைய 25 மோப்ப நாய்களை ஏலம் எடுத்த நிலையில், ஏலத்தின் மூலம் பொலிஸ்துறை 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமாக வருமானம் ஈட்டியதாகவும் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குரங்கு தொல்லையா? உடன் அறிவிக்கலாம்

(கொழும்பு)

பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பயிர்களை நாசம் விளைவிக்கும் குரங்குகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி பயிர்களை நாசப்படுத்தும் குரங்குகள் தொடர்பில் உடனடியாக தெரிவிக்க தொலைபேசி இலக்கமும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

1992 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கலாம். இதேவேளை குரங்குகளால் விவசாய செயற்பாடு பாதிக்கப்படாமல் இருப்பதற்கு எடுக்கவுள்ள முதல் வேலைத்திட்டத்தை கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் அமுல்படுத்தவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

## 62

## கலாநிதி முருகர் குணசிங்கம்

சுமார் 45 ஆயிரம் ஈழத்தமிழர்கள் வாழும் சுவிட்சர்லாந்தில் சுமார் 4600 தமிழ் மாணவர்கள், பத்தில் ஒரு வீதத்தினர், தமிழ்மொழி கற்பதையும் தமிழ் மொழியில் தேர்வு எழுதுவதையும் நோக்கும்போது எந்த அளவிற்குத் தமிழ் பெற்றோர்களும் அவர்கள் பிள்ளைகளும் கல்வியில் ஆர்வம் கொண்டு இருக்கின்றார்கள் என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது.

இதன்மூலம் அவர்களுடைய உயர் கல்வியில் பல்கலைக்கல்வியில் எந்த அளவிற்கு கவனம் செலுத்துவார்கள் என்பதனையும் ஊகிக்கலாம்.

பிரெஞ்சு, டொச்சு மொழி ஆற்றல் காரணமாகவும் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்புக் காரணமாகவும் தொழில்சார் துறைகள் சார்ந்த விஞ்ஞானக் கற்கைகளை விரும்பிக் கற்பதனால், மருத்துவ, பொறியியல், கணனி, வங்கித்துறைகளில் வல்லுநர்களாகத் தொழில் புரியும் நிலைக்கு வளர்ந்துள்ளனர்.

40 விழுக்காடு இளம் தலைமுறையினர் அதிக வருமானம் உள்ள தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

ஆசிய பசுபிக் நாடுகளில் அவுஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டதுபோல், வட அமெரிக்காவில் மூன்றரை இலட்சத்திற்கும் மேல் ஈழத் தமிழர்கள் வாழும் கனடா நாட்டில் உள்ள நிலைமைகளை ஆய்வு செய்வதே பொருத்தமாக அமையும்.

சுமார் 80 விழுக்காட்டுக்கும் மேல் ஈழத்தமிழர்கள் வாழும் ஒன்ராறியோ மாநிலத்தில் உள்ள ஒன்றரை இலட்சத்திற்கும் மேல் தமிழர்கள் வாழ்கின்ற ரொறண்ரோ நகரத்தை ஆய்வுக்கு எடுப்பதன்மூலம் ஈழத்தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்புப் பற்றிய நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும்.

பொதுவாக ரொறண்ரோவில் வாழும் ஈழத்தமிழர்களுள் 94 விழுக்காட்டினர் ஆங்கில மொழி அறிவு பெற்று இருக்கின்றார்கள். சாதாரணமாகவும் அதி சிறப்பாகவும் பேசக்கூடிய இரண்டு வகையினராகக் காணப்படுகின்றார்கள்.

ஆங்கில மொழி ஆற்றல், அவர்களைக் கல்வி தொழில்களில் ஒரு நல்ல நிலைமையில் வைத்து இருக்கும் என்பதனை எதிர்பார்க்கலாம்.

குறிப்பாக 1970களில் இருந்து கனடாவிற்குச் சென்றவர்கள் ஆங்கில மொழியில் இயற்கையாக அதி திறமையான தேர்ச்சி உடையவர்களாக விளங்குவார்கள்.

1983 இற்குப் பின்னர் அகதிகளாகச் சென்றவர்களின் பிள்ளைகளும் கனடாவில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளும் ஆங்கில மொழியில் கல்வி கற்கின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் ஆவர்.

அவர்களும் ஆங்கில மொழியில் அதிக புலமை உள்ளவர்களாகவே இருப்பார்கள்.

அத்தோடு 1983 இற்குப் பின்னர் அகதிகளாகச் சென்ற முதலாவது தலைமுறையினரில் ஆங்கில மொழி தெரிந்தவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருந்திருக்கின்றனர் என்பனைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

மேலும் ஆங்கிலம் தெரியாமல் சென்றவர்களுக்கு ஆங்கில அறிவினை ஊட்டுவதற்காக கனேடிய அரசு பல்வேறு வழிவகைகளை வழங்கியதன் விளைவாகவும் அவர்கள் ஆங்கிலச் சூழ்நிலையில் வாழ்ந்து அதற்குள் அம்பலப்படுத்தப்படும் போது, ஆங்கில மொழியில் பேசுபவர்களாக மாறும் நிலை ஏற்பட்டு இருக்கும்.

எடுத்துக்காட்டாக 2001 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களின் கல்வித் தகைமைகளை நோக்கும்பொழுது மேற்கண்ட நிலைமைகள் தெளிவாகத் தெரிய வருகிறது:

ரொறண்ரோவில் வாழும் ஈழத் தமிழர்களுள், மேல் நிலைப் பாடசாலைப் பத்திரம் பெற்றவர்கள் சுமார் 34 வீதமும் டிப்ளோமோ பத்திரம் பெற்றவர்கள் 10 வீதமும் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் 2 வீதமாகவும் காணப்படுகின்றனர்.

மேற்கண்ட புள்ளிவிபரங்கள் 2001 இல் எடுக்கப்பட்டவை ஆகும். 1983 இல் அதிகளவில் கனடா வந்த தமிழர்கள் 2001 ஆம் ஆண்டில் சுமார் ஏழு ஆண்டுகள் அங்கு வாழ்ந்த நிலைமையில் மேற்படி புள்ளி விபரம் திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்குள் இளம் தலைமுறையினர் பெரும்பாலும் உள்ளடங்கி இருக்க மாட்டார்கள்.

எனவே மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் கனடா வந்த ஈழத்தமிழர்களுள் சுமார் 64 வீதத்திற்கும் மேலானவர்கள் படித்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

அதனால் அவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி உடையவர்களாக இருந்திருப்பார்கள்.

மேலும் ஏழு ஆண்டுகால ஆங்கிலக் கல்வி கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமையினாலும் ஆங்கில சமூகத்தில் வாழும் சூழ்நிலையும் சகல மட்டத்தினரையும் ஆங்கில மொழியில் தேர்ச்சி உடையவர்களாக உருவாக்கி இருக்கும்.

இந்நிலைமை 2014 இல் மேலும் வளர்ச்சி அடைந்து இருக்கும். குறிப்பாக இரண்டாவது தலைமுறையினர் ஆங்கில மொழியில் கல்வி கற்கின்றமையும் முதலாவது தலைமுறையினர் கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகக் கனடாவில் வாழ்வதாலும் ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி ஏற்பட்டு இருக்கும்.

2001 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி ஒன்ராறியோவில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகக் கல்லூரிகளிலும் சுமார் 5000 தமிழ் மாணவர்கள் கல்விகற்று இருக்கின்றனர்.

**(2002 Statistic Canada)** இந்நிலைமை 2014 இல் பன்மடங்காக உயர்ந்து இருக்கும். கூடுதலானவர்கள் மருத்துவம், விஞ்ஞானம், முகாமைத்துவம் போன்ற துறைகளிலேயே தமது கவனத்தைக் குவித்து இருக்கின்றனர்.



கனடா பல்கலைக்கழகம்

எடுத்துக்காட்டாக வணிகம், முகாமைத்துவத் துறைகளில் 29 வீதமும் விஞ்ஞானத்துறைகளில் 48 வீதமானவர்களும் வைத்தியத்துறையில் 5 வீதமும் கலை, மானிடவியல் துறைகளில் 18 வீதமானவர்களும் தமது கல்வியை மேற்கொண்டு உள்ளனர்.

மேற்கண்ட புள்ளிவிபரங்களில் மருத்தவத் துறையில் மிகவும் குறைந்த வீதத்தினரே ஈடுபட்டு உள்ளனர்.

அதற்குக் காரணம் மிகத்திறமையாக உயர்நிலைப் பாடசாலையில் மதிப்பெண்களைப் பெறுகின்ற மாணவர்களே வைத்தியத்துறையில் சேர முடியும்.

தமது பிள்ளைகளை வைத்தியராக உருவாக்க வேண்டும் என்ற இலட்சியங்கொண்ட தமிழ்ப் பெற்றோர்களுக்கு இந்நிலைமை பெரும் சவாலாகவும் ஏமாற்றமாகவும் இருந்து வருகின்றது.

பொதுவாக இந்நிலைமைகளே இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து நாடுகளிலும் காணப்படுகின்றது.

மேற்கண்ட புள்ளி விபரங்களின் ஊடாக கனடாவில் வாழும் ஈழத்தமிழர்கள் ஒட்டுமொத்தமாகத் தமது பிள்ளைகளை விஞ்ஞானம், தொழில் துறை சார்ந்த கல்வியில் அதிகம் ஈடுபட வைத்து உள்ளனர் என்பது தெளிவாகின்றது.

அவர்களின் கல்வி சார்ந்த சாதனைகள் தமிழர்களின் பொருளாதார வள்ர்ச்சிக்கும் பெரும்பங்கு ஆற்றி உள்ளது என்பதனை மறுக்க முடியாது.

தமது பிள்ளைகளுக்குத் தொழில் சார்ந்த கல்வியைக் கொடுக்க வேண்டுமென்ற தமிழ்ப் பெற்றோரது ஆர்வமும் அக்கறையும் தியாகங்களும் இளம் தலைமுறையினரின் கல்விச் சாதனையில் பெரும்பங்கு ஆற்றி உள்ளது.

அத்தோடு கல்வி கற்ற படித்த வர்க்கத்தினர் 1970களில் இருந்து கனடா சென்று அவரவர் துறைகளில் உயர் பதவிகளில் அமர்ந்தமையும் தமது துறை சார்ந்த துறைகளில் மேற்படிப்புகளில் ஈடுபட்டதும் இளந்தலைமுறையினரை ஊக்கப்படுத்தியது.

. எடுத்தக்காட்டாக கனேடியப் பல்கலைக்கழகங்களில் பெயர்பெற்ற கல்விமான்களாகிய பேராசிரியர்கள் ஏ.ஜெ. வில்சன், மனோகரன் செல்வத்துரை, செல்வநாயகம் கனகநாயகம், சுரேஸ் கனகராஜா, சேரன் உருத்திரமூர்த்தி, வி.இலகுப்பிள்ளை போன்றவர்களும் வட அமெரிக்காவில் 20 ஆம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் வாழ்ந்த இயற்கை விஞ்ஞானியும் தத்துவ ஆசிரியருமான உலகப் புகழ்பெற்ற கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, காவார்ட் பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற பேராசிரியராக விளங்கிய ஜெயராசா தம்பையா ஆகியோர் கனேடிய இளம் தலைமுறையினருக்கு நல்ல வழிகாட்டிகளாகவும் ஊக்கமூட்டும் சக்திகளாகவும் இருந்திருப்பார்கள்.

2006 ஆம் ஆண்டளவில் ரொறண்ரோவில் மட்டும் 228 ஈழத்தமிழர்கள் மருத்துவர்களாகப் பணிபுரிகின்றார்கள்.

இத்தொகை 2014 ஆம் ஆண்டில் பன்மடங்காக உயர்ந்திருக்கும். அதே போன்று பல்வேறு தொழில் சார்ந்த துறைகளிலும் ஈழத்தமிழர்களின் இளம் தறைமுறையினர் பன்மடங்காகப் பெருகி இருப்பார்கள்.


சுருங்கக் கூறின் அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய மூன்று நாடுகளிலும் கல்வி, வேலைவாய்ப்புத் துறைகளில் ஈழத்தமிழர்களும் அவர்களின் இளம் தலைமுறையினரும் அதி தீவிர வளர்ச்சி அடைந்து உள்ளதைக் காண முடிகின்றது.

இதேபோன்று அவர்கள் வாழும் ஏனைய நாடுகளிலும்அத்தகைய நிலைமை இருப்பதனையே பல்வேறுபட்ட புள்ளி விபரங்களும் ஆய்வுகளும் காட்டி நிற்கின்றன.

(தொடரும்)

# எல்லை மீறும் தீ

## ஆபத்தை நோக்கி நகர்கிறதா?



(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் சங்கமன் கண்டி கடற்பரப்பில் எம்ரி நியூ டயன்ட் எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீ மீண்டும் வீரியம் பெற்றிருப்பதால் ஆபத்தான நிலையை நோக்கிச் செல்வதாக தெரியவந்துள்ளது.

விமானப்படையினர் நேற்று பிற்பகல் வெளியிட்டுள்ள காணொளியில் கப்பலின் தீ தீவிரமாக எரிகின்ற காட்சிகள் வெளியாகின.

நேற்று முன்தினம் 40 கடல் மைல் தொலைவுக்கு அப்பால் இழுத்துச் செல்லப்பட்டு விடப்பட்ட குறித்த கப்பல் கடும் காற்றினால் மீண்டும் நகர்ந்து கரையிலிருந்து 27 கடல் மைல் தொலைவை அடைந்துள்ளது.

தீ கொழுந்துவிட்டு எரிந்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்த இரண்டு நாடுகளும் கடும் பிரயத்தினத்தில் ஈடுபட்டு வருகின்றன.

விமானப்படை மற்றும் கடற்படை, இந்திய கடற்படை கடலோர காவல்படை என்பன தொடர்ந்தும் தீயை அணைக்கப் போராடி வருகின்றன.

இதேவேளை கடற்படையினர் 2000 கிலோக்கிராமுக்கு அதிகமான தீயை அணைக்கும் திரவ வகை ஒன்றை விமானம் மூலம் வீசி வருகின்றனர்.

தீப்பரவல் அதிகரித்து விபத்து நிகழ்ந்தால் மிகப் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை இலங்கை சந்திக்கும் என்று சுற்றுச்சூழல் அவதானிகள் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## நியூ டயமன்ட் கப்பலில் தீ
## மேலும் வெளிநாட்டு நிபுணர்குழு வருகை



(கொழும்பு)

நியூ டயமன்ட் கப்பலை ஆராய்வதற்காக மேலும் 11 பேர் கொண்ட குழு அம்பாறை மாவட்டம் கல்முனைக்கு சென்றுள்ளது. குறித்த குழு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் அம்பாறை சங்கமன்கண்டி கடற்பரப்பில் தீப்பற்றிய நியூ டயமன்ட் கப்பல் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக கடற்படை கப்பல் மூலம் தீப்பிடித்த கப்பலை சென்றடைந்துள்ளனர். (ஐ)

## புதிய அரசியலமைப்பு வரும்வரை மாகாணத் தேர்தல் வேண்டாம்
## எல்லே குணவங்ச தேரர் கோரிக்கை

(கொழும்பு)


புதிய அரசியலமைப்புச் சட்டம் கொண்டு வரப்படும் வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டாமென எல்லே குணவங்ச தேரர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்று முன்தினம் கருத்து வெளியிடும் போது அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அத்துடன் நாட்டுக்கு மிகவும் பாதிப்பான எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பாகவும் கூடிய அவதானத்துடன் இருந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு முழுமையான புதிய அரசியலமைப்புச் சட்டம் தேவை என்பது எமது நிலைப்பாடு. எனவே அந்த அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக்கூடாது என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எம்.சி.சி. உடன்படிக்கை, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம், பயிர் செய்யாத 7 இலட்சம் ஏக்கர் நிலம், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் என்பன தொடர்பாக



நாங்கள் தகவல்களை பெறக் கூடிய அவதானத்துடன் இருக்கின்றோம் என்பதை அரசிற்கு நினைவூட்ட விரும்புகிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## குற்றவாளியொருவர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம்
### - பொன்சேகா சாடல் -

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடியாது என அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி, இன்று சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

2010 ஆம் ஆண்டு என்னை சிறைக்குள் தள்ளினார்கள். அன்று ஆட்சியில் இருந்த ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாகவே நான் கைது செய்யப்பட்டேன்.

30 மாதங்கள் வரை நான் தண்டனை பெற்றிருந்தேன். சிறைத்தண்டனை பெற்ற பின்னர்தான் நான் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டேன்.

ஆனால், இன்று குற்றவாளியொருவரே உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அன்று எனக்கு பாராளுமன்றத்திற்கு வர சபாநாயகர் அனுமதி வழங்கவில்லை. அப்படியிருக்கும் போது இப்போது இவருக்கு மட்டும் எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என கேள்வி எழுப்ப விரும்புகிறேன்" என அவர் தெரிவித்தார். (ஐ-4)

## ஸஹ்ரானின் கொள்கை அறிக்கைக்கு இணங்கிய முஸ்லிம் காங்கிரஸ்- ஃபாரூக் தகவல்

(கொழும்பு)

2015 பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் ஸஹ்ரான் ஹாஷிம் சமர்ப்பித்த கொள்கை அறிக்கைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணக்கம் வெளியிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாண உறுப்பினர் ஷிப்லி ஃபாரூக் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்று முன்தினம் சாட்சியம் வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2015 பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஸஹ்ரான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான கொள்கைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம் வெளியிட்டதாக அவர் கூறினார்.

முன்னதாக, அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வாலியுல்லா அறக்கட்டளையின் செயலாளர் முகமது ஸெய்லான், 2015 பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஐந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஸஹ்ரான் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதாக ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

இந்தக்கட்சிகள் சார்பில் உடன்படிக்கையில் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, ஷிப்லி ஃபாரூக், ஏ.எல்.எம். ரூபி மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் ஆகியோர் கையெழுத்திட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் 2015 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து காத்தான்குடி வைத்தியசாலையில் ஸஹ்ரானின் சகோதரர் ரில்வானை சந்தித்தமை குறித்து ஷிப்லி ஃபாரூக்கை ஆணைக்குழு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்தக்கேள்விக்கு பதிலளித்த சாட்சி, 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21 ஆம் திகதி அன்று ஏற்பட்ட மோதலின் போது நான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் ரில்வான் ஒருவர் என்றும் கூறினார்.

2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் தாமும் காயமடைந்த நான்கு பேரை சென்று பார்வையிட்டதுடன், தாக்குதலில் சேதமடைந்த காத்தான்குடியில் உள்ள தேசிய தௌஹீத் ஜமாத்தின் பள்ளிவாசல் மற்றும் விருந்தகம் என்பவற்றையும் பார்வையிட்டதாக குறிப்பிட்டார்.

இதன் சாட்சி வழங்கலின்போது ஸஹ்ரான் அமைப்பின் பள்ளிவாசலுக்கு முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சென்ற போது அங்கு ஸஹ்ரான் ஹாஷிமை சந்தித்தமை மற்றும் அவருடன் கலந்துரையாடிய காணொளி சாட்சிக்கு காண்பிக்கப்பட்டது.

அத்துடன் ஸஹ்ரானின் தேசிய தௌஹீத் ஜமாத் பள்ளிவாசலுக்கு அதற்கு முன்னர் ஏன் சென்றீர்கள் என்று ஆணைக்குழுவினர் சாட்சியிடம் கேள்வி எழுப்பினர்.

எனினும் சாட்சிக்கு அந்த கேள்விக்கு பதிலளிக்க முடியவில்லை. எனினும் பயங்கரவாத தாக்குதல்களை ஒருங்கிணைப்பதற்கு முன்னர் ஸஹ்ரானின் அணியின் முக்கிய உறுப்பினரான ஆர்மி மொஹிதீன் தனக்குக் கீழ் பணியாற்றி வந்ததாகவும் ஷிப்லி ஃபாரூக் சாட்சியமளித்தார். (ஐ-2)

# தேயிலை ஏற்றுமதியின் ஊடாக வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுங்கள்



## ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

**தேயிலை ஏற்றுமதியின் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால திட்டங்களை வகுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.**

பாரிய பின்னடைவை சந்தித்துள்ள தேயிலைத் தொழிற்றுறையின் மேம்பாடு, பல அம்சங்களில் நடைபெற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், தொழிற்றுறை வீழ்ச்சிக்கு காரணமான விடயங்களை அடையாளம் கண்டு, உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு காணப்பட்ட கேள்வியை மீண்டும் ஏற்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

20 பெரிய பெருந்தோட்ட நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் செயலிழந்துள்ளதாகவும், சிறு தேயிலைத்தோட்டங்கள் அதிக உற்பத்தியை அடைந்துள்ளதால் தோட்ட நிறுவனங்களின் உற்பத்தித் திறன் வேகமாகக் குறைந்து வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தேயிலைத் தொழிற்றுறையில் ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் செயலற்ற தன்மைக்கான காரணங்களை குறுகிய காலத்தில் கண்டறிந்து நிரந்தர தீர்வுகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.(ஜ-4)

# ஐ.தே.கவின் பிரதித்தலைவர் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய பிரதித் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நியமனம் எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படலாம் என கட்சியின் சட்ட செயலாளர்

நிசங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கட்சியின் செயற்குழு கூடவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நியமனம் செய்யப்படலாம் எனினும் பிரதித்தலைவர் யார் என்பது இறுதி செய்யப்படவில்லை, பல பெயர்கள் பரிசீலனையில் உள்ளன

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழு கடந்த ஆண்டு செப்டெம்பர் 20 ஆம் திகதி நிறுவப்பட்டதுடன் ஆணைக்குழுவின் பதவிக்காலம் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2110

**மயூரி**



உங்கள் தலையணையை மதியுங்கள், உங்கள் கண்ணீரை சுமப்பவை அவை தான்..

**தரன்**



உங்கள் துக்கம் கவலைகளை யாரிட்மும் சொல்லாமல் மறைக்கின்றீர்களா, நீங்கள் மன முதிர்ச்சி அடைந்து விட்டீர்கள்.

**குணேஸ்**



ஒரு முட்டாளை முட்டாள் என நிரூபிக்க முயற்சி செய்பவனே, உலகின் மிகப்பெரிய முட்டாள்

**லது**

மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று அனைவருக்கும் ஒரு கனவு இருக்கும், பலருக்கு அது கடைசி வரை கனவாகவே இருக்கும்.

**மிதர்ஷ்**



உலகத்தை நீ ரசிக்க வேண்டுமானால் உன் காதலனோடு இரு. உலகமே உன்னை ரசிக்க வேண்டுமானால் உன் தோழியோடு இரு...

**நிரு**

உன் நிலமை எப்படியாக இருந்தாலும் விழித்தெழு, என்னை முன்நிறுத்து, போராடு, வெற்றி கொள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சஹ்ரானுடன் தொடர்பு 12 பேருக்கும் மறியல்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 12 சந்தேகநபர்களை எதிர்வரும் 21 ஆம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப் பட்டபோது காணொளி ஊடாக சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 12 சந்தேக நபர்களையும் மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஐ.என். றிஸ்வான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# சீனத்தூதுவராக பாலித கோஹண

(கொழும்பு)

சீனாவுக்கான புதிய தூதுவராக முன்னாள் வெளி விவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண நியமிக்கப்படவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு அவரது நியமனம் தொடர்பான விபரங்களை உயர் பதவிகள் குறித்த குழுவின் அங்கீகாரத்துக்காக அனுப்பியுள்ளது.

இவர் முன்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# ஆன்மீகம்

## புறஞ்சொல்லும் பாவத்துக்குப் பரிகாரமே இல்லை!

(நேற்றை தொடர்ச்சி)

சீடனின் குனிந்த தலை நிமிரவே இல்லை! 'ஆட்காட்டி விரல் நீட்டி ஒருவனின் குற்றங்களை நீ குறிப்பிடுகையில் மற்ற விரல்கள் உன் மார்பை சுட்டிக் காட்டுவதை மனிதா நீ ஏன் உணர மறுக்கிறாய்?' என்கிறார் அறிஞர் ஒருவர். தீயைவிட வேகமாகப் பரவக் கூடியது வதந்தி! வதந்தியாலே வாழ்வை இழந்தவர்கள் சமூகத்தில் பலபேர் இருக்கிறார்கள். காதிற்குக் காது மாறி மாறி சென்று கொண்டே துரிதகதியில் இயங்குகிறது இந்த விஷமத்தனமான விடயம். ஒருவரைப் பற்றி ஒதுங்கி நின்று பழி கூறுவதும், ஒட்டுக் கேட்பதும் பிரபல மனிதர்கள் முதல் சாதாரண மக்கள் வரை ஒரு பொழுது போக்கு அம்சமாக மாறிவிட்டது. கவியரசர் கண்ணதாசன் பாடுகிறார். 'வீடெங்கும் திண்ணை கட்டி வெறும் பேச்சு வெள்ளை வேட்டி'

இன்னொரு பாடலில் அவரே இகழ்ந்துரைக்கிறார்: 'கதை கட்ட ஒருவன் பிறந்து விட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு' ஆன்மீகப் பேருரையிலும், மந்திர பூஜையிலும் சிறந்து விளங்கிய மகான் ஒருவரை அன்பர் ஒருவர் அடிபணிந்தார். "சுவாமி! எங்கள் ஊரில் உள்ள ஒரு பெரியவரைப் பற்றி நான் என் அறியாமையினால் அவதூறாகப் பிரசாரம் செய்து விட்டேன். இப்போதுதான் எனக்கு நல்ல புத்தி வந்திருக்கிறது. நான் செய்த தவறான பிரசாரத்தை நினைத்து இப்போது வருந்துகிறேன். என் பாவம் தீர தாங்கள்தான் ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும்" என்றார். புன்னகை புரிந்தவாறே மகான் சொன்னார்: "உடனே வீட்டுக்குச் சென்று நீ தினசரி படுத்துத்தூங்கும் தலையணையை எடு. ஊரின் நடுவில் நின்று அந்தத் தலையணையைக் கிழித்து அதில் அடங்கியுள்ள பஞ்சை எல்லாம் காற்றில் நாலாபுறங்களிலும் பறக்க விடு!

பிறகு வந்து என்னைப் பார்!" 'எளிதான பரிகாரம்' என்று எண்ணிய அவர் அவ்வாறே செய்து விட்டு மீண்டும் வந்து மகானைப் பணிந்தார். அப்போது மகான் சொன்னார்: "நீ செய்தது பரிகாரம் என்று நினைத்து விட்டாயா? இப்போது நான் சொல்வதைச் செய்தால்தான் பரிகாரம் முற்றுப்பெறும். பறக்க விட்ட பஞ்சை எல்லாம் ஒன்று சேர்த்து தலையணையில் மீண்டும் நிரப்பி எடுத்து வா!" அன்பர் விழிபிதுங்கி, சற்றே ஒதுங்கி நின்று கேட்டார். "சுவாமி, நான்கு புறங்களிலும் பறந்து விட்ட பஞ்சை எல்லாம் எப்படி பொறுக்கி ஒன்று சேர்க்க முடியும்?" "அதுதான் நீ செய்த பாவச் செயல்! அவதூறாக செய்த பிரசாரம் பலரை சென்றடைந்து விட்டது. இப்போது அதை எப்படித் திரும்பப் பெற முடியும்? வதந்தி பரப்புவது, புறம் பேசுவது இவை பரிகாரம் இல்லாத பாவங்கள். இனிமேல் யாரைப் பற்றியும் துஷ்பிரசாரம் செய்யாதே! அதுவே தூய புண்ணியம்" என்றார் மகான்,

'அறம் கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம் கூறான் என்றல் இனிது!'

என்கிறது திருக்குறள். வீரத்துறவி விவேகானந்தர் அதி அற்புதமாக நமக்கெல்லம் சொல்வது என்ன தெரியுமா? 'பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை, அவரைத் தட்டிக் கொடுப்பதாக மட்டுமே இருக்க வேண்டும்.'

# செய்தித்துளிகள்

## கைதுகள்

### சுற்றிவளைப்பில்...

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 547 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் பொது இடங்களில் மதுபானம் அருந்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 6 மணி முதல் நேற்று 8 மணிவரையான காலப்பகுதியிலே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-4)

**************

### போதை மாத்திரைகளுடன்...

(கொழும்பு)

கொழும்பு, மோதர பகுதியில் வைத்து 18 ஆயிரத்து 900 போதை மாத்திரைகளுடன் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். லொறி ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகள் 4 மில்லியன் ரூபாய் பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

**************

### தங்கத்துடன்...

(கற்பிட்டி)





கற்பிட்டியில் வைத்து 10 கிலோ தங்கத்துடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். காரில் குறித்த தங்கத்தை எடுத்துச் சென்றபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-4)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 | 200 |
| தக்காளி | 120 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 140 | 150 | 140 | 150 |
| கரட் | 140 | 180 | 160 | 160 |
| பூசணி | 100 | 110 | 120 | 120 |
| புடோல் | 60 | 100 | 70 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 200 | 280 | 240 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 | 250 |
| போஞ்சி | 350 | 320 | 250 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | --- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | --- | --- | --- | --- |
| வெங்காயப்பூ | 200 | 220 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 70 | 80 | --- | 80 |



# சிறுவர் அரங்கம்

## உருவத்தை பார்த்து பழகாதே



ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. மீன் குஞ்சுகள் எப்பொழுதும் கரையோரம் கூடி விளையாடிக் கொண்டிருக்கும். அதில் சோமு சிண்டு என்ற மீன்கள் ஒருநாள் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஏய் சிண்டு என்னைப்பிடி பார்க்கலாம் என்றது. என்கிட்டேயே சவால் விடுறியா இப்ப பாரு, ஒரு நொடியில் பிடிக்கிறேன் என்று சொல்லி விளையாடிக் கொண்டிருந்தது.

அப்போது கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்து ஏய் சோமு, அங்கே பார் அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கிறான்.

அவன் குரலை நீ கேட்டிருக்கிறாயா? அருவருப்பாக இருக்கும். அவனை பார்த்தால் பயமாக இருக்கிறது வா போய் விடலாம் என்று சிண்டு சொன்னதும் எல்லா மீன்களும் குளத்துக்குள் வேகமாகச் சென்றன.

அவசர அவசரமாக மீன்கள் உள்ளே சென்றபோது, பசங்களா? ஏன் இப்படி ஓடிவர்றீங்க? என ஒரு பெரிய மீன் கேட்டது. கரையில் காகம் இருக்கு. அதனோட நிறமும் குரலும் பயமா இருக்கு? அதான்...

ஓ. காகமா? காகத்தினால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை.

உருவத்தை மட்டுமே வைத்து ஒருவரைப் பற்றி தப்பாக நினைக்கக் கூடாது என்று, அந்த பெரிய மீன் சொல்ல, மற்ற மீன்குஞ்சுகள் இந்த தாத்தாவுக்கு வேற வேலை இல்லை. எப்பவும் உபதேசம் தான். வாங்க போகலாம் எனக் கூறிச் சென்றது. அடுத்த நாள் வந்தது. குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்து இருந்தது.

அதைப் பார்த்த மீன் குஞ்சுகள், ஏய் அங்கே பாரு வெள்ளையா... அட என்ன பறவை அது? வெள்ளையா எவ்வளவு அழகா இருக்கு! அலகும் நீளமா இருக்கு. அடடே! அதனோட நடையைப் பாரேன். மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது கொக்கு.

உடனே மீன் குஞ்சுகள், அண்ணே! நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. உங்க அலகைத் தொட்டுப் பார்க்கலாமா? கொக்குக்கு ஒரே கொண்டாட்டம்.

ஓ, தொட்டுப் பாரேன். ஒரு மீன் குஞ்சு கொக்கை நெருங்க,. கொக்கு மீனை கவ்வியது. நல்லா மாட்டிக்கிட்டியா? என்றது.

மாட்டிய மீன் ஆ,என்னை விட்டு விடு! என்று கெஞ்சியது. இதைப்பார்த்த மற்ற மீன் குஞ்சுகள் ஆபத்து...ஓடுங்க... ஓடுங்க... என்று குளத்திற்குள் சென்றன.

அந்த கொக்கு கவ்விய மீனுடன் வானத்தில் சென்று மறைந்தது. மற்ற மீன் குஞ்சுகள், அந்த தாத்தா மீன் சொன்னது சரியாப் போச்சு. அழகை மட்டும் பார்த்து ஒருத்தரோட பழகக்கூடாது.

ஆமாம் ஆமாம் என்று உறுதியெடுத்து கொண்டன. அன்று முதல் மற்ற மீன் குஞ்சுகள் கவனமாக இருந்தன. சந்தோஷமாக வாழ்ந்தன.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

62


காடு வெட்டி சோழனால் கட்டப்பட்ட கோயில் இது என்றொரு செய்தியும் சொல்லப்பட்டது.

இவை தான் உண்மையான தகவல்கள் என்று மக்கள் நம்பத் தொடங்கியபோது நல்ல வேளையாக உண்மையான வரலாறு வெளியே வந்தது.

தமிழ்நாட்டிலுள்ள பல கோயில்களுக்கு நம்மிடத்தில் சரியான வரலாறு கிடையாது. தல புராணங்கள் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட புனை கதைகளே பெரும்பாலான கோயில்களின் வரலாறாக உள்ளது.

ஆனால் பெரிய கோயில் ஒருவிதிவிலக்கு. இந்தக் கோயிலின் உருவாக்கத்தில் தொடங்கி ராஜராஜனின் அரச நிர்வாகம் வரை சோழர் ஆட்சி ·தொடர்புடைய ஏராளமான தகவல்கள் கல்வெட்டுக்களில் வெட்டப்பட்டுள்ளன.

இந்தக் கல்வெட்டுத் தான் பெரிய கோயிலின் புதிரை அவிழ்த்தன. 1886 இல் சென்னை அரசாங்



பெரியகோயிலின் ஸ்ரீ விமானம்

கம் ஜேர்மன் நாட்டு கல்வெட்டு ஆராய்ச்சியாளரைக் கொண்டு பெரிய கோயில் குறித்து ஆய்வு செய்தது. அப்போது கிடைத்த ஒரு கல்வெட்டுச் செய்தியில் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எழுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீஸ்வரம் என இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்மூலம் ராஜராஜ சோழன்தான் பெரிய கோயிலைக் கட்டினார் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் உறுதிப்படுத்தப்பட்டது.

1892 இல் வெளியான தென்னிந்திய கல்வெட்டுக்கள் எனும் நூலில் இக்கோயில் ராஜராஜனால் கட்டப்பட்டதுதான் என்று அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டது.

இப்படியொரு பிரமாண்ட படைப்பைக் கட்டியெழுப்பிய தலைமைச் சிற்பி குஞ்சரமல்லன் இவருக்குத் துணையாக வேலை பார்த்த இதர சிற்பிகளின் அனைவர் பெயர்களும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆலய ஊழியத்துக்காக 4 பண்டாரிகளும் 170 மாணிகளும் 6 கணக்கர்களும் 12 கீழ்க்கணக்கர்களும் பணியில் அமர்த்தப்பட்டார்கள். சிலர் நிரந்தர ஊழியர்கள். மற்றவர்கள் சுழற்சி முறையில் பணியில் அமர்த்தப்பட்டார்கள்.

பெரியகோயில் பண்டாரங்களில் சோழ மண்டல மக்களுக்குச் சொந்தமான விலையுயர்ந்த பொருட்கள் குவிக்கப்பட்டிருந்ததால் 118 ஊர்களிலிருந்து மெய்க்காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

கோயில் பயன்பாடுகளுக்காக அயல்நாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தினந்தோறும் வழிபாட்டுக்குப் பயன்படும் கற்பூரம் சுமாத்ரா தீவிலிருந்து கொண்டுவரப்பட்டது.

பண்டைய தமிழர்கள் பிரதானமாகப் போற்றி வளர்த்த கலைகள்- கட்டடக்கலை, சிற்பக்கலை, இசை மற்றும் நடனக் கலைகள் இந்த அத்தனை கலைகளையும் ஒருங்கிணைத்த கோயிலாகப் பெரியகோயில் திகழ்ந்தது.

(தொடரும்)

சோம்பேறி இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் போன்றவன். அது நின்றாலும் ஓடினாலும் பயனில்லை. ~ கூப்பர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விவசாய முயற்சிகளுக்கு உதவி செய்ய முன்வாருங்கள்

கொரோனா நோய்த் தொற்றுக்குப் பின்னர் விவசாய முயற்சிகள் மும்முரம் பெற்றுள்ளன என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதை தடுப்பதற்காக ஊரடங்குச் சட்டம் அமுலாகிய போது வீடுகளுக்குள் முடங்கிய மக்கள் வீட்டுத் தோட்டத்தின் மீது கருசனை செலுத்தினர்.

வீட்டுத் தோட்ட முயற்சிகள் வெற்றியளித்ததுடன் உளரீதியான உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

இதனால் விவசாயத்தின் மீதான நாட்டம் அதிகரிக்கலாயிற்று.

இதுதவிர, உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் கொரோனா தொற்றுக் காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என்ற சிந்தனை மக்கள் மத்தியில் ஏற்பட, விவசாயத்தின் மீதான நாட்டம் உத்வேகம் பெற்றுள்ளதெனலாம்.

இதன் காரணமாக நெற்செய்கையில் மிகப்பெரியதொரு முன்னேற்றம் ஏற்படவுள்ளதை எதிர்வுகூற முடியும்.

அதாவது இதுகாறும் விதைக்கப்படாத வயல்கள் அனைத்தும் பண்படுத்தப்பட்டு நெல் விதைப்பதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடக்கின்றன.

காணிச் சொந்தக்காரர்கள் நெல் விதைக்காதவிடத்து, குறித்த வயல்களை ஏனையவர்கள் உழுது பண்படுத்தி விதைக்க முடியும் என்ற விசேட அறிவிப்புகளும் நெற்செய்கை மீது அதீத ஆர்வத்தையும் கருசனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் விவசாயத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம் மற்றும் விவசாய அமைப்புகள் என்பன நெல் உள்ளிட்ட விவசாயச் செய்கைக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க முன்வர வேண்டும்.

விவசாயச் செய்கை தொடர்பில் இருக்கக்கூடிய அரச மானியங்கள் மற்றும் ஊக்குவிப்புகள் அனைத்தும் விவசாயிகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுமாயின் விவசாயச் செய்கையில் பாரிய முன்னேற்றம் ஏற்படும்.

இதற்கு மேலாக, நெற்செய்கை வெற்றியளிக்க வேண்டுமாயின் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது மிக மிக அவசியமாகும்.

பொதுவில் வயல் நிலங்களுக்கு வேலி அமைத்து நெல் விதைப்பதென்பது சாத்தியப்படாததொன்று.

எனவே பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் கமத்தொழில் அமைப்புகள் அதிரடியாகக் களத்தில் இறங்கி கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்தாக வேண்டும்.

இதுவிடயத்தில் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்குவார்களாயின் விவசாய முயற்சி பெரு வெற்றியடையும் என்பது சத்தியம்.

# வயோதிபரை மோதித் தள்ளிய வாகனம்

## காயங்களுடன் தப்பிய விசேடதேவையுடைய முதியவர்

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக மூன்று சக்கர வண்டியில் பயணித்த முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது தனியார் பேருந்து மோதியதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா ஈச்சங்குளம் கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த இராசையா செல்வராசா (வயது-68) நேற்று முன்தினம் காலை வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பும்போது பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வீதியைக் கடக்க முற்பட்டபோது தனியார் பேருந்து மூன்று சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் மீது மோதியது.

இதன்போது பேருந்தின் கீழ்ப் பகுதியில் சிக்கிக்கொண்டு காயங்களுக்குள்ளானவரை பொதுமக்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

குறித்த நபர் கடந்த இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில காயமடைந்து இடுப்புக்கு கீழ் செயற்பாடுகள் இன்றி மூன்று சக்கர வண்டியின் துணையுடன் தனது அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 157 பேர் வீடுகளுக்கு

(நெளுக்குளம்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பல்வேறு நாடுகளிலும் இருந்தவர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பக்ரேய்ன் நாட்டில் சிக்கித்தவித்த 157 இலங்கையர்கள் விசேட விமானங்களின் மூலம் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு வவுனியா பம்பைமடுவிலுள்ள இராணுவ தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த, 157 பேர் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிற்கு கொரோனா தொற்றில்லையென உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (5-4-299)

# மத்திய வங்கி ஆளுநர் கலந்துரையாடல்

(முறிகண்டி)

கிளிநொச்சி அறிவியல் நகர் மத்திய வங்கியில் நேற்று மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஸ்மன் தலைமையில் 4 மாவட்டங்களின் கிராம பிரதிநிதிகளுடன் நுண்கடனால்மக்கள்எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மத்திய வங்கியின் கிளிநொச்சி அலுவலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் கிராமப் பிரதிநிதிகளுடன் மத்திய வங்கியின் ஆளுநர் நுண்கடனால் மக்களின் பாதிப்பு தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் சிறிவர்த்தன, துணை ஆளுநர்களான நாணயக்கார மற்றும் கருணாரத்தின, மத்திய வங்கியின் திணைக்கள பணிப்பாளர்கள்,மேலதிக பணிப்பாளர்கள் கிராமமட்ட பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஜ-5-100)

# வீதிகள் புனரமைப்பு

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு கீழுள்ள ஆயிரத்து 417 கிலோமீற்றர் நீளமான வீதிகள் கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தர புனரமைப்பு எதுவுமின்றி காணப்பட்டது.

அது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை உள்ளூராட்சி திணைக்களத்திற்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கும் வழங்கிய வீதிகளின் முன்னுரிமையை ஏற்று ஆசிய அபிவிருத்தி வங்கி 50 கிலோ மீற்றர் வீதிகளுக்கு காப்பெற் வீதிகளை அமைக்க முன்வந்துள்ளது. அந்த வகையில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புனரமைப்பு பற்றிய முன்னாயத்த கூட்டம் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. கூட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் மற்றும் பொறியியலாளர்கள்,திட்டப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** தவசிகுளம் பிரதேசத்திலும்

**வவுனியா பிரதேசத்தில்** தாண்டிக் குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, இரணையிலுப்பைக் குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, நொதேர்ண் பண்ணை, புதுக்குளம் நீர்ப்பாசன சபை, ICT மறக்காறம்பளை சமயபுரம் வரண் அரிசி ஆலை, தாண்டிக் குளம் நீர்ப்பாசன சபை, புதிய பேருந்து தரிப்பிடம், நித்தியநகர், பம்பை மடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பூவரசங் குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நாம் வாழ்வதற்கு நன்றாக இருக்க வேண்டியவை மூன்று. அவை நம் உள்ளம், உடம்பு, சுற்றுப்புறம். -டாக்டர் மு. வரதராசனார்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### பிறர் நலம் பேணுங்கள்

❖ நல்லவர்கள் தீயவனைக் கண்டால் வழி விட்டு ஒதுங்குவது பயத்தினால் அல்ல. மானம் காக்கவே.

❖ உணவால் உடல் நலம் பெறுவது போல, பக்தியால் உள்ளம் நலம் அடைகிறது.

❖ பிரார்த்தனை செய்தால் உடம்பெங்கும் அருள் என்னும் மின்சாரம் பரவத் தொடங்கும்.


❖ வாழ்வில் உயர்வதும், தாழ்வதும் அவரவர் மனதில் எழும் எண்ணத்தைப் பொறுத்தது.

❖ பெற்றோர் ஒழுக்கத்தைப் பேணி வாழ்ந்தால், பிள்ளைகளும் அதனைப் பின்பற்றி வாழ்வர்.

❖ எந்த செயலில் ஈடுபட்டாலும் சுயநலம் கொள்ளாமல் பிறரின் நலனுக்காகச் செய்யுங்கள்.

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ்- 2020 ஒல்ட்கோல்ஸ் அணி அரை இறுதிக்கு தெரிவு

யாழ்.கிரிக்கெட் சம்பியன் - 2020 தொடருக்கான 4 ஆவது கால் இறுதிப் போட்டி கடந்த 1 ஆம் திகதி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் ஒல்ட்கோல்ஸ் அணி, கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.



முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியில் மதூஸன்-35, சாரங்கன்-44, றசிகரன்-37, டக்ஸன்-26, தேவக்குமார்-24 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத் தடுப்பில் ஒல்ட்கோல்ஸ் அணியின் நிரோஸன் 3, ஜின்துஜன், சிறிகுகன் 2 விக்கெட்டுக்களையும் பிரியலக்ஸன் விதுகன். கஜேந்திரன் 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஒல்ட்கோல்ஸ் அணி 26.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப்பெற்றனர். போட்டியில் மதூஸன்-93, கஜீபன்-29, திலீபன்-49, நிரூசிகன்-12, சிறிகுகன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். களத்தடுப்பில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார்பாக தேவக்குமார்-03, மதூஸன், அஜித் தலா 01 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (4)







அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் இளைஞர் கழகத்தால் அரியாலை சரஸ்வதி பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை 6ஆம் திகதி இடம்பெற்றது. இப் போட்டியில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு பரிசில் வழங்கி வைத்தார். மற்றும் இன் நிகழ்வின் சிறப்பு மற்றும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனோல்ட், கிருபாலேணர்ஸ் உரிமையாளர் ஆ.கிருபாகரன், யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்-2020 27 வது தொடர் 12ஆம் திகதி ஆரம்பம்

மேற்படி தொடருக்கான 30 பந்து பரிமாற்றங்களை துடுப்பாட்ட சுற்று தொடர் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இத் தொடரில் பங்குபற்றும் 24 கழகங்களை மேற்பிரிவு, கீழ் பிரிவு என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேல் பிரிவில் ரி.சி.சி. விக்டோறியன்ஸ், ஸ்கந்தா ஸ்ரார், ஸ்ரான்லி, அரியாலை டிறைற்றேன், கிறாஸ்கொப்பர்ஸ், றெஜின்போ, யாழ்.ஜொனியன்ஸ், ஒல்ட்கோல்ஸ், நியூஸ்ரார், பற்றீசியன்ஸ் ஆகிய 12 அணிகளும், கீழ் பிரிவில் யூனியன்ஸ், ஹாட்லியையிற்ஸ், ஜொலிஸ்ரார், டிறிபேக்ஸ்ரார், AB, சென்றலைட்ஸ், திருநெல்வேலி, வை.எம்.எச்.ஏ, யாழ்.சென்றல், மானிப்பாய் பரிஸ், சிறிகாமாட்சி, மூளாய் விக்டோறி, கே.சி.சி.சி. ஆகிய 12 அணிகளும் பங்கு பற்ற உள்ளன.

முதலாவது போட்டி விக்டோறியன்ஸ் அணிக்கும் ஸ்கந்தா ஸ்ரார் அணிக்கும் காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும் பிற்பகல் ஒரு மணிக்கு ஸ்ரான்லி அணிக்கும், அரியாலை சென்றல் அணிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அதேசமயம் சுழிபுரம் விக்டோறியா கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு யாழ்.சென்றல் அணிக்கும், திருநெல்வேலி YMHA அணிக்கும், பிற்பகல் ஒரு மணிக்கு சிறிகாமாட்சி அணிக்கும், மூளாய் விக்டோறி அணிக்கும் நடைபெறவுள்ளது. (4)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**



சித்தன்கேணி கலைநகர் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் சங்கானை உதய தாரகை அணிக்கும் நடைபெற்ற போட்டியில் சங்கானை உதய தாரகை அணி தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## மனைவி 4 மாத...

இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

22 வயதுடைய ரஞ்சித் வசந் என்ற இளைஞன் திருமணம் முடித்து மனைவியுடன் கூமாங்குளம் இரண்டாம் ஒழுங்கை பகுதியில் வசித்து வருகின்றார்.

குறித்த இளைஞனின் மனைவி நான்கு மாத கர்ப்பிணியாக காணப்படுவதினால் குறித்த பெண் நேற்றுக்காலை நெடுங்கேணி வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் தனிமையில் குறித்த இளைஞன் இருந்துள்ளார்.

மாலை 5.00 மணியளவில் இளைஞனின் சகோதரன் வீட்டுக்கு சென்று பார்வையிட்ட சமயத்தில் இளைஞர் சடலமாக காணப்பட்டதினை அவதானித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் அயலவர்களின் உதவியுடன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பண்டாரிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## நாய்க்கடிக்கு...

அவருக்கு தவறுதலான தடுப்பூசியை ஏற்றியமையாலேயே மரணம் ஏற்பட்டதாக அவரது உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக இறந்தவரது உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மகாறம்பைக்குளம் புளியடிப் பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் கடந்த இரண்டு நாட்களிற்கு முன்பாக நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார்.

இந்நிலையில் அதற்கான தடுப்பூசியை போடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் அவர் சென்றுள்ளார்.

அவருக்கு நாய் கடித்ததற்கான தடுப்பூசி நேற்றுக் காலை போடப்பட்டது. அதன்பின்னர் அவர் வீட்டிற்கு சென்றார்.

வீட்டிற்கு வந்த நிலையில் அவருக்கு திடீர் என்று சுகயீனம் ஏற்பட்டது. இதனால் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் புளியடிப் பகுதியைச் சேர்ந்த சிவபாலன் (வயது - 49) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார்.

குறித்த மரணம் தவறுதலான தடுப்பூசி ஏற்றப்பட்டமையாலேயே சம்பவித்ததாக மரணமடைந்தவரின் உறவினர்கள் வைத்தியசாலையில் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பாக திடீர் மரண விசாரணை அதிகாரி சி.கிசோர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-3,299)

## யாழில் சுற்றி...

டுள்ளனர்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டோர் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல் நேற்று இரவு 8 மணிவரை யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், வட்டுக்கோட்டை முதலான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 200 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதுடன், 32 வீதித் தடைகளும் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸ்ார் தெரிவித்துள்ளனர். (ம-3,8)

## வவுனியாவில்...

தம்பனைக்குளம் பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் பெண் உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சின்னத்தம்பனைக்குளம் குளப் பகுதிக்கு அண்மையில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள் ளது.

அப்பகுதியில் வசித்து வரும் இரு பிரிவினருக்கு சின்னத்தம்பனை குளத்தில் மீன் பிடிப்பது தொடர்பில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதுடன் வாள்வெட்டுச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் காரணமாக பெண் உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

(ம-3,250)

## 20ஆவது...

வர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று மாலை 4 மணியளவில் பாராளுமன்ற வளாகத்திற்கு அருகிலுள்ள மாதுலுவாவே சோபித தேரருடைய உருவச்சிலைக்கு முன்னால் உறுதிமொழியெடுத்ததோடு இந்த ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுத்தனர். (ம-3)

## ஹெரோயினுடன்...

நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் அதே இடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,8)

## வட்டி...

அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை சீர்செய்து வணிக கடன்களுக்கான வட்டியை 7 சதவீதமாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## 18 வயது...

பகுதியைச் சேர்ந்த குகதாஸ் தினேஸ் (வயது - 18) என்ற இளைஞனே நேற்று உயிரிழந்தவராவார்.

கடந்த 13ஆம் திகதி விபரீத முடிவெடுத்த நிலையில் குறித்த இளைஞன் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அன்றைய தினம் மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## குளவி...

காகிய நிலையில் அதில் சிகிச்சை பலனின்றி 3 வயது சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நொச்சிமோட்டையில் உள்ள அவர்களது விவசாயக் காணியில் நேற்று மதியம்12.30 மணியளவில் குளவிக் கொட்டுக் குள்ளான சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

விவசாய காணியினை சுத்தம் செய்வதாக ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த நால்வர் காணியில் இருந்த மரம் ஒன்றினை வெட்டிய சமயத்தில் மரத்தினுள் காணப்பட்ட குளவிக்கூடு கலைந்து குளவிகள் அவர்கள் நால்வர் மீதும் கொட்டியுள்ளது.

இதில் படுகாயமடைந்த நால்வரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

(ம -3,250)

## மாடு...

மாட்டிறைச்சி தேவை ஏற்படின் வெளிநாட்டில் இருந்து மாட்டிறைச்சி இறக்குமதி செய்வது குறித்த வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இறைச்சிக்காக மாடுகளை அறுத்தல், ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது.

இலங்கையில் மாடு அறுப்பதையும் மாட்டிறைச்சிக் கடைகளையும் தடை செய்ய வேண்டும் என்று 2014 பெப்ரவரி மாதத்தில், பொது பல சேனா அமைப்பு பாரிய எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

பின்னர் நல்லாட்சி அரசில், வெளிநாட்டில் இருந்து இறைச்சியை இறக்குமதி செய்வதின் ஊடாக நாட்டில் மாடறுப்பை தடை செய்வதற்குரிய செயல் திட்டத்தை முன்னெடுக்கும்படி நிதி அமைச்சருக்கு தான் பணித்திருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 2016ஆம் ஆண்டு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜனாதிபதியின்...

அவர் நேற்று மல்வத்து பீடத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக ஜனாதிபதிக்கு, கட்டுப்பாடுகள் இல்லாமல் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். நாட்டின் மக்களுடன் கலந்தாலோசித்து நடத்தப்பட்ட தேர்தலுக்குப் பிறகு ஒரு நிர்வாக ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நாட்டின் சார்பாக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையை உருவாக்கியது என்றார். (ம-3)































வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (3765)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



| | | | |
|---|---|---|---|
| கனடா | - 650/= | ஜேர்மனி | - 1150/= |
| லண்டன் | - 1050/= | பிரான்ஸ் | - 1150/= |



**அருள்**
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

**அருள்**
பெற்றோல் செற் எதிரில்
பிரதான வீதி, நெல்லியடி.

**அருள்**
இ.போ.ச. பஸ் டிப்போ எதிரில்
பிரதான வீதி, பருத்தித்துறை.

தொ. இல:- 076 443 1576 (C-255)

## TECHNO WORLD

**A/L**

தொழில் நுட்பப் பிரிவு

E-Tech
B. Tech
SFT

ஆரம்பம்
10.09.2020
காலை
8.00 மணி

077 017 5346

# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழகப்
பேராசிரியர்
**தி. வேல்நம்பி**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**யோகமணி**
**திருநாவுக்கரசு**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயர் அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள் ( 89/90 பிரிவு )
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்

## English Trainer Training Diploma
### 240 hrs (Teacher Training) 4 Months

- அடிப்படையிலிருந்து முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும்

**புதிய பிரிவுகள் - ஆரம்பம்**

முன்பதிவினை மேற்கொண்டு கற்கைநெறியில் இணையவும்.

12.09.2020 - Weekends } 9.00 a.m - 1.00 p.m
14.09.2020 - Weekdays } 2.30 p.m - 5.30 p.m

ELAS இல.51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 076 223 5678, 076 697 3040 (3834)

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | - ரூ.1300 |
| ஜேர்மனி | - ரூ.1300 |
| டென்மார்க | - ரூ.1300 |
| கொலன்ட் | - ரூ.1300 |
| பெல்ஜியம் | - ரூ.1300 |
| இத்தாலி | - ரூ.1450 |
| லண்டன் | - ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள்

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

கப்பல் ஊடாகவும் பொருட்கள் அனுப்ப முடியும் (குறைந்தது 100-200Kg) (C-234)

லண்டன்-1050/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1450/=
சுவிஸ்- 1350/= அவுஸ்ரேலியா- 1750/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 077 888 9388 070 330 5500 | பளை மன்னார் கொழும்பு

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

2001 Honda Benly CD 90
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்கு உண்டு.
(GE - Number) (3839)

தொடர்பு : 077 898 9691
யாழ்ப்பாணம்

## விரைவு பொதிகள் சேவை
## V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதனார்மடம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240 (C-112)

## AIRR LINE

வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
கனடா - 650/=

கே.கே.எஸ். வீதி,
உப்புமடம்.
Tel : 076 443 1575 (C-256)

பதிவு இல : 65754

## யாழ் மதர் கெயர் வைத்தியசாலை

# எட்டாம் ஆண்டில் உங்கள் சேவையில் 09.09.2020



- சகல வைத்திய நிபுணர்களின் சேவைகள்
- "ஸ்கான்" & "எக்கோ" வசதிகள்
- "ஈ.சீ.ஜி" & எக்ஸ்ரே வசதிகள்
- முக அமைப்பு கதிரியல் வசதிகள்
- சகல ஆய்வுகூடப் பரிசோதனைகள்
- இழையவியல் பரிசோதனை
- என்பின் அடர்த்தியை அளக்கும் சேவை

தினமும்
சேவை நேரம்
காலை 6.00
இரவு 10.00

**Medical Specialist Consultation Hospital**
No: 514/18, Hospital Road, Jaffna. T.P: 021 221 9393 / 021 221 9595
021 221 9797 / 021 222 9521 / 021 222 6363
Email - yarlmothercare17@gmail.com Web - yarlmothercare.com (3788)

# 8ஆம் ஆண்டில் கால் பதிக்கும்

## யாழ். மதர் கெயர்
## YARL MOTHER CARE



மக்களுக்கு
நீண்டகாலம்
சிறந்த
சேவை ஆற்ற
வாழ்த்துகின்றோம்.

09.09.2020

அம்பிகா டிஸ்பென்சரி,
சாவகச்சேரி. (C-267)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.